விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 06 வெள்ளிக்கிழமை (22.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 246

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை



(ஜெனிவா)

**இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போர் தொடர்பில் ஐ.நாவால் மேற்கொள்ளப்படும் சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.**

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர யொலன்டா போஸ்டர் இந்த வலி யுறுத்தலை விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சர்வ தேச சமூகத்தின் நம்பிக்கையை பெறவேண்டுமாயின் அரசியல், நிதியியல், சுதந்திரம் என்பன அவ சியமாக கருதப்படுகிறது.

இதுவரை காலமும் இலங்கை யில்நிறுவப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணை களின்போது சாட்சி பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வில்லை. அத்துடன் விசாரணை களின் பொறுப்புக்கூறல் தன்மை கள் பாதுகாக்கப்படவில்லை என் றும் யொலன்டா குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் சர்வதேச விசா ரணையாளர்களுக்கு இலங்கை அதிகாரிகள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அதேநேரம், உள்ளூர் மட்டத்தில் விசாரணைகளுக்கு இலங்கை அதி காரிகள் முன

20ஆம் பக்கம் பார்க்க....

## சுவாமியின் துரோகத்தை தமிழினம் மன்னிக்காது

### கூறுகிறார் பிரபா கணேசன்

(கொழும்பு)

அண்மைக்காலமாக சுப்பிர மணியன் சுவாமி, இலங்கை பாது காப்பு தரப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு - இலங்கை தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக் களை தெரிவித்து வருவது எமக்கு இழைக்கும் பாரிய துரோகமாகும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் தகவல் மற்றும் தொழி நுட்ப பிரதி அமைச்சர் பிரபா கணே சன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார. மேலும் தெரிவித்ததாவது,

சுப்பிரமணியன் சுவாமியின் நட வடிக்கைகள் இந்திய அரசாங்கத் தின் பிரதிபலிப்புகள் அல்ல. மாறாக இவரை இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இலங்கை அரசாங் கம் காட்ட முயற்சிக்கின்றது.

2011 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சுவாமி இலங்கைக்கு வருகை தந் தபோது அவரை அரசியல் கோமாளி என்று நான்

20ஆம் பக்கம் பார்க்க....

## சுப்பிரமணிய சுவாமி வன்னிக்கு விஜயம்

(கொழும்பு)

பா.ஜ.கவின் சிரேஷ்ட தலை வர்களில் ஒருவரான சுப்பிரமணிய சுவாமி நேற்று வியாழக்கிழமை வன்னிக்கு விஜயம் மேற்கொண் டார்.

கொழும்பில் நடைபெற்ற பாது காப்புக் கருத்தரங்கில் பங்குபற்று வதற்காக இலங்கை வந்திருந்த சுப்பிரமணிய சுவாமி நேற்று வன் னியின் பலபகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டார்.

இராணுவத்தினரின் பாதுகாப் புடன் முள்ளிவாய்க்கால், வட்டுவா கல், புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி போன்ற வன்னியின் பல பகுதி களுக்கும் சுப்பிரமணிய சுவாமி விஜ யம் செய்தார்.

சுப்பிரமணிய சுவாமியுடன் உயர் அதிகாரிகளும் அப்பகுதி களுக் குச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட் டது. (செ-11)

## மிளகாய்த் தூளை முகத்தில் விசிறி ஒரு இலட்சம் ரூபாய் பணம் திருட்டு

### மோ.சைக்கிளில் வந்தோர் கைவரிசை

(மல்லாவி)

முல்லைத்தீவிலுள்ள வங்கி யொன்றில் வைப்பிலிடப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் பணத்தினை மீள எடுத்துக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் தனது வீடு நோக்கி பய ணித்துக் கொண்டிருந்த குடும்பப் பெண் மீது எதிரே மோட்டார் சைக் கிளில் வந்த இரு இளைஞர்கள் மிளகாய்த் தூளினை முகத்திற்கு விசிறிவிட்டு பணப்பையினை அப கரித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று வியாழக் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு வற்றாப்பளை அம்மன் கோவிலுக்கு செல்லும் வீதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, தனது இந்தியன் வீட் டுத்திட்டத்திற்குரிய ஒரு இலட்சம் ரூபாய் பணம் முல்லைத்தீவில் அமைந்துள்ள வங்கியொன்றில் வைப்பிலிட்ட நிலையில் அதனை மள எடுத்துக் கொண்டு வற்றாப்பளையில் உள்ள தனது

20ஆம் பக்கம் பார்க்க....

## வீதி சமிக்ஞைக் கம்பத்துடன் மோதியது மோட்டார் சைக்கிள்

### இளைஞன் பலி ; குடும்பஸ்தர் காயம்

(மல்லாவி)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதி சமிக்ஞை கம்பத்துடன் மோதியதில் சம்பவ இடத்தில் இளைஞன் ஒருவன் மரணமடைந்ததுடன் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலை யில் மல்லாவி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் தென்னியம் குளம் துணுக்காய் என்னும் முக வரியைச் சேர்ந்த இவர்களில் சந் திரசேகர் நிமலன் (வயது 21) என்ற இளைஞன் அவ்விடத்தில் உயிரி ழந்ததுடன் மூன்று பிள்ளைகளின் தந்தையான மாணிக்கம் கொங்கா தரன் (வயது 38)

20ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் அரசியல் கைதிகள் மீது 8 நாட்களாக தொடர் சித்திரவதை

### நடவடிக்கை எடுக்கக்கோரி வடமாகாணசபையில் குரல்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம் சிறைச்சாலை யில் 3 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 8 நாட்களாக தொடர்ந்து சித் திரவதைக்குட்படுத்தப்பட்டு வரு கின்ற நிலையில் அவர்களது பாது காப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப் பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரி வித்தார்.

இது தொடர்பில் தாம் ஏற்கெனவே ஆராய்ந்துள்ளதாகவும் நாளைய தினம அவர்களினை நேரில் சென்ற பார்வையிட உள்ளதாகவும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சயந்தன் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த தமிழ் அரசியல் கைதி களில் 53 பேர் அனுராதபுரம் சிறைச் சாலையில் அடைத்து வைக்கப்பட் டுள்ளனர்.

இவர்களில் 3 தமிழ் அரசியல் கைதிகள் தமிழர்கள் உள்ள சிறைக் கூடத்திலிருந்து சிங்களவர்கள் உள்ள சிறைக் கூடத்திற்கு மாற்றப் பட்டுள்ளனர்.

இம் மூவரும் அங்கு வைத்து உடல், உள ரீதியில் துன்புறுத்தப் படுவதோடு உணவு பறிமுதல் செய் யப்பட்டும் சித்திரவதைக்குட் படுத்தப் பட்டும் வருகின்றனர்.

இவ்வாறு சித்திரவதைக் குட் படுத்தப்படும் அரசியல் கைதிகள் உயா [illegible]

20ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணை எல்லையை நீடிக்க வலியுறுத்தல்

### தீர்மானம் வரைவோம் என்கிறார் சி.வி

(யாழ்ப்பாணம்)

இலங்கை மீது மேற்கொள்ளப் படவுள்ள சர்வதேச விசாரணைக் குழுவின் விசாரணைக் காலத்தை நீடிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் பேசவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதி யரசருமான சி.வி.விக்னேஸ்வரன தெரிவித்தார்.

விசாரணைக் காலத்தை நீடிப் பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட டமைப்புத் தலைவர்களுடன் பேசி வலுவானதொரு பிரேரணையை வடக்கு மாகாண சபையில் கொண்டு



வரவுள்ளதாகவும் இவர் தெரிவித் துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 14 வது அமர்வு அவைத் தலைவர் சீ.வ. கே.சிவஞானம் தலைமையில் நேற் றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியது.

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலரால், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் கட்டடத்தொகுதி-மருதங்கேணிப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டட வேலைக்காக தகமையுடையோரிடம் இருந்து ஞ்றியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

01. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

02.தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

03.ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம்-யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 22.08.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல 0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04.விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **22.08.2014 முதல் 04.09.2014 வரை** காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

05.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 05.09.2014 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் **05.09.2014 திகதி பி.ப 3.00** மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப் பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

06.கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

07.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மில்லியன்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/DCDC/ SAFE HOUSE/07 | பாதுகாப்பு மத்திய ஸ்தானம் நிர்மாணம் | 11.70 | 06 மாதம் | C6 | 117,000.00 | 1000/- |
| JF/DCDC/ SAFE HOUSE/07 | சுற்று மதில், கிணறு, நீர்த்தாங்கி அமைத்தல் | 4.39 | 03 மாதம் | C8 | 44,000.00 | 1000/- |

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி-8268)

# ரயில் மோதி மாணவி பலி

(கொழும்பு)

கண்டியிலிருந்து பதுளை வரை சென்ற ரயிலில் பாடசாலை மாணவி ஒருவர் மோதி உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை 9.35 மணியளவில் தலவாக்கலை வட்டகொடை புகையிரதநிலையத்திற்கு அண்மித்த பகுதியில் ஹெலிரூட் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தலவாக் கலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

12.30 மணிக்கு இடம்பெறவுள்ள புவியியல் உயர்தர பரீட்சைக்கு தோற்றுவத்ற்காக வீட்டிலிருந்து 7.30 மணிக்கு பாடசாலை சீருடையுடன் தலவாக்கலைக்கு வந்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த மாணவி ரயிலில் மோதியபோது படுங்காயத்திற்குள்ளாகியுள்ளார். இதன் பின்னர் ரயிலின் சாரதிகள் மேற்படி மாணவியை அதே ரயிலில் நானுஓயா புகையிரதநிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது நானுஓயா புகையிரத நிலைய அதிகாரிகள் குறித்த மாணவியை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுமதித்தபோது மாணவி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு உயிரிழந்த மாணவி திம்புள்ள கீழ்பிரிவு தோட்டத்தை சேர்ந்த வெள்ளசாமி பிரியா (வயது 19) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தற்கொலையா அல்லது விபத்தா என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)


## விற்பனைக்கு

**LF XXXX** மிட்சுபிசி படி 650 CC
(பெற்றோல்) விற்பனைக்கு உண்டு.
(இலகு கொடுப்பனவும் ஒழுங்கு செய்து தரப்படும்)
(சி-8269)

தொடர்பு: **077 623 7956**


# மரண அறிவித்தல்



## அமரர் இளையதம்பி துரைசிங்கம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் சிவன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி துரைசிங்கம் 20.08.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவனேஸ்வரியின் கணவரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் கந்தசாமி நல்லபிள்ளையின் அன்பு மருமகனும், கனகம்மா, நல்லம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் மைத்துனரும் சுந்தரலிங்கத்தின் சகலனும் மற்றும் இரத்தினத்தின் மைத்துனரும் தங்கராசாவின் சகலனும், நவரட்ணராணி (U.K), மனோன்மணி (உப தபாலதிபர்-ஆவரங்கால்), அமரர் சிவராஜா (முன்னாள் பிரதேச சபை செயலாளர்-பச்சிலைப்பள்ளி), விநாயகலிங்கம் (U.K), வரதலக்ஷ்மி (U.K), இரவீந்திரா (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), நிமலா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராஜா (Appex Engineering(PVC)Ltd ), தங்கராஜா (மலேசியா), கேதீஸ்வரி (ஆசிரியை- ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கணேஸ்வரி (U.K) மாணிக்கவாசகர் (U.K), திருச்செல்வம் (சுவிஸ்), கஜந்தினி (சுவிஸ்), சிவகுமார் (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சிகா (U.K) துளசிஜா (U.K), நீபன் வைஸ்ணவி (ஸ்ரீ புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), விதுர்ச்னா (நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), சிந்துஜன் (*Royal Institute - Colombo*), விதுர்ஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), விதுஜென் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சியானிஷா (நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கோபிகன் (U.K), துசிகன் (U.K), பிரகலை (U.K), வேணுகானன் (U.K), ஆதவன் (U.K), திருசினி (சுவிஸ்), வேணுஜன் (சுவிஸ்), துசாந்தன் (சுவிஸ்), துசிந்தன் (சுவிஸ்), துசான் (சுவிஸ்), அஸ்வின் (U.K) ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தர்ராஜன் (ஜேர்மனி), சுசீந்திரா (இணுவில்), சுகுமார் (சுவிஸ்), சுரேந்திரன் (சுவிஸ்), சுரேஸ்குமார் (ஜேர்மனி), தயானந்தன் (U.K), ஜெயந்தினி (ஜேர்மனி), ஜெயந்தன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்) ஆகியோரின் பெரிய தகப்பனும் அமரர்களான செல்வராஜா, சரஸ்வதி, சரோஜினி தேவி மற்றும் செல்வரத்தினம், தங்கராஜா, சகுந்தேஸ்வரி, யோகராஜா, விமலராணி, வரதராஜா, பத்மராணி யோகசிவம் மற்றும் காலஞ்சென்ற வாமதேவன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22.08.2014) வெள்ளிக்கிழமை காலை 09.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

தகவல்:-குடும்பத்தினர்
(7463) 0212058017, 0770220683

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் கேட்டதையே கூட்டமைப்பும் கேட்கிறது

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கோரியதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோருகின்றது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசாங்கத்திடம் இல்லாத நவீன ஆயுதங்களை விடுதலைப்புலிகள் வைத்திருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மிக மோசமான காலகட்டமொன்றில் இருந்த போது நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டைப் பாதுகாத்து அபிவிருத்தியில் கட்டியெழுப்பியுள்ளார்.

உலகிலுள்ள பயங்கரவத அமைப்புகளில் முதலிடத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்ததுடன் வேறு எந்த பயங்கரவாதிகளிடமும் இல்லாத ஆயுதங்கள், நீர் மூழ்கிக் கப்பலுடன் உலகளாவிய வலையமைப்பும் இருந்தது.

அரசாங்கத்திடம் கூட நீர் மூழ்கிக் கப்பல் இருக்கவில்லை. விமானப் பலம், கடற் பலம் என பலம் வாய்ந்த அமைப்பாக விளங்கிய புலிகள் மதத் தலைவர்களையும் அனைத்து மதத்தினரையும் கொன்றனர்.

இந்த கொடூர பயஙகரவாதத்தை இல்லாதொழித்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே. அவரது வழிகாட்டலில் இந்த நாட்டின் புத்திரர்களான படையினர் அர்ப்பணிப்புடன் செயறபட்டு பயங்கரவாதத்தை ஒழித்தனர். நாடு சகல துறைகளிலும் வீழ்ச்சியடைந்து ஸ்தம்பித்துப் போயிருந்த நிலையில் மீள நாட்டை இயங்கச் செய்தவர் ஜனாதிபதி. எதிர்க்கட்சி தலைவர் ரணில் .விக்ரமசிங்க வடக்கு மக்களின் வாக்குகளைப் பெற்று வெல்ல முடியும் என எண்ணிக் கொண்டு செயற்படுகின்றார். வடக்கில் பிரபாகரன் கோரியதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோருகிறது.



இதனை மக்கள் விரும்புவார்களா? கிழக்கு மக்கள் இதனை ஏற்பார்களா? கப்பம் பெறும் யுகம், தமது பிள்ளைகளை கூட்டிச் சென்று படுகொலை செய்த யுகம், வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி நாடெங்கிலும் குண்டு வெடித்த யுகத்தை மக்கள் மீண்டும் விரும்புவார்களா? நாடு தற்போது சுதந்திரமடைந்துள்ளது. அந்த நாட்டை நாம் அனைவரும் இணைந்து பாதுகாப்பது முக்கியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## எதற்கு முன்னுரிமையளிப்பது என்பதில் அரசிற்குள் குழப்பம்

(கொழும்பு)

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களை தடுக்கவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குரல் கொடுத்திருக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்திற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்குவதில் பயனில்லை எனவும், மாறாக இஸ்ரேலின் தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி இஸ்ரேலுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வழமை போன்றே எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதில் குழம்பிப் போயிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட அப்பாவி பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

உகண்டாவின் நீர் வடிகாலமைப்பை மேம்படுத்த அரசாங்கம் நன்கொடை வழங்கியுள்ளதாகவும் அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பகுதிகளில் மக்கள் குடிநீரின்றி அவதியுறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் குறுகிய கால நோக்கங்களினால் நாட்டின் பல தலைமுறைகள் கடனாளியாக மாறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ)

## இஷ்டத்திற்கு நிதிசெலவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை


### சரத் என்.சில்வா சுட்டிக்காட்டு

நிறைவேற்று ஜனாதிபதி என்பதற்காக இஷ்டத்திற்கு நிதியை செலவு செய்ய முடியாது எனவும் பாலஸ்தீனத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி வழங்கியமை சட்டவிரோதமானது எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்திற்கு ஜனாதிபதி நிதி உதவி வழங்கிய முறைமை சட்டவிரோதமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளரும், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுவது அரசியல் சாசனத்தின் 148 சரத்தை மீறும்செயலாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்திற்கு புறம்பாக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



வரவு செலவுத் திட்டத்திற்கு புறம்பாக இவ்வளவு பாரிய தொகை பணத்தை செலவிட வேண்டுமாயின் குறைநிரப்புப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பணம் தொடர்பில் 148ஆம் இலக்க சரத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, அமெ அனைத்து ஜனநாயக நாடுகளினதும் நிதி நிர்வாகம் பாராளுமன்றின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பணத்தை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தனக்கு விரும்பியவாறு செலவிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு பாரிய பொருளாதீர நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும், ஜனாதிபதியினால் நன்கொடையாக வழங்கப்பட்ட பணத்தை ஈடு செய்ய நாடு மீண்டும் கடன் பெற வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கத்தின் மொத்த வருமானம் போதுமானதாக இல்லை எனவும் இவ்வாறான நிலையில் ஜனாதிபதி எவ்வாறு நிதி வழங்க முடியும் என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (இ)

## இன்றைய இராசி பலன்

**22.08.2014**

**(ஆவணி 06, வெள்ளிக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு**

**துவாதசி பிற்பகல் 2.34 மணிவரை**

**புனர்பூசம் முன்னிரவு 11.40 மணிவரை**

**இராகுகாலம் 10.35-12.05 மணிவரை**

**சுபநேரம் 6.05-7.35 மணிவரை**

**பிரதோச விரதம்**

வளவன்

**மீனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், சிந்தனை மிகுதியான நாள்.

**மேடம்** மனோ தைரியம் கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, போசன சுகக்குறைவான நாள், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், ரோக நிலையுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாதர் நட்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், போசன சுகமுண்டு.

**கும்பம்** எடுத்த காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, செலவுகளுக்கு பணம் போதாமலிருக்கும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நாள், புத்திரர்களால் பெருமையுண்டு.

**கடகம்** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடு த்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**மகரம்** பகைவர்கள் விலகுவர், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும், உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடக்க முன்வருவர், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தனதானியச் சேர்க்கையுண்டு, முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**தனுசு** மனோதைரியமுண்டு, காரிய அனுகூலமுண்டு, களஸ்திர நன்மையுண்டு, வருமானத்தை அதிகரிக்க முயற்சிகள் செய்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** மனச்சஞ்சலங்கள் கூடும், குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம், முயற்சிகளில் தாமதங்கள் உருவாகும், பிரயாண பயமுண்டு, புதிய [illegible]

**துலாம்** எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், தொழிலில் சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்

**கன்னி** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை விசாரணை செய்யத் துடிக்கும் ஐ.நா. அமெரிக்காவை கண்டுகொள்ளாதது ஏன்?

## பாலித கோஹன கேள்வி

அமெரிக்காவின் மிசூரியில் தற்போது கலவரங்கள் இடம்பெறுகின்றன-பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்- இது குறித்து சர்வதேச விசாரணைகள் இடம்பெறுமா, ஏன் சிறிய இலங்கையை மாத்திரம் விசாரணை செய்ய துடிக்கின்றனர் என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை தூதுவர் பாலித கோஹன கேள்வி எழுப்பியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி நாங்கள் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருப்பதை குழப்ப விரும்புவர்களை ஐ.நா விசாரணை மேலும் பலப்படுத்தும்.

இவ்வாறான விசாரணைகள் எதுவும் இடம்பெற வேண்டுமென இலங்கைக்குள்ளிலிருந்து கோரிக்கைகள் எதுவும் எழவில்லை.

நாட் டின் பெரும்பான்மையான மக்கள் இந்தவிதமான விசாரணைகளை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள்.

இலங்கையை வேண்டுமென்றே நீதியற்ற விதத்தில் இலக்கு வைக்கிறார்கள், ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், அமெரிக்காவில் என்ன நடைபெறுகிறது என்பதை கண்டறிவதற்கு எத்தனை விசாரணைகள் இடம்பெறுகின்றன?



அமெரிக்காவின் மிசூரியில் தற்போது கலவரங்கள் இடம்பெறுகின்றன-பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்- இது குறித்து சர்வதேச விசாரணைகள் இடம்பெறுமா?, ஏன் சிறிய நாடான இலங்கையை மாத்திரம் விசாரணை செய்ய வேண்டும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

# காணிப்பிரச்சினையே கலவரத்திற்கு காரணம்

அசாம் மற்றும் நாகாலாந்து மாநில எல்லையில் உள்ள கொலாகட் பகுதியில் போராட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரு மாநில எல்லைப்பகுதியில் உள்ள ஏழு கிராமங்களில் வசிக்கும் அசாம் மாநிலத்தை சேர்ந்தவர்கள் 15 பேர் நாகாலாந்தில் கொல்லப்பட்ட சம்பவத்தை கண்டித்து அசாம் ஆதிவாசிகள் மாணவர்கள் கூட்டமைப்பு மற்றும் இதர அமைப்பை சேர்ந்தவர்கள் இந்த போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

போராட்டத்தின் போது அதில் பங்கேற்றவர்கள் பொலிசாரை தாக்க முனைந்ததால் முதலில் தடியடி நடத்திய பொலிசார், பின்னர் கண்ணீர் புகை குண்டுகளையும் வீசினர். ஆனாலும் மக்கள் தங்கள் தாக்குதலை தொடர்ந்ததால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் ஒருவர் பலியாக 21 பேர் பலத்த காயமடைந்தனர்.

இந்நிலையில் இப்போராட்டத்திற்கு உண்மையான காரணம் இரு நபர்களுக்கு இடையே உள்ள நிலப் பிரச்சினைதான் என்று மத்திய அரசு தற்போது கண்டுபிடித்துள்ளது. இந்த நிலப்பிரச்சினையை உள்ளூர் அரசியல் தலைவர்களும், சமூக ஆர்வலர்கள் மற்றும் உள்நாட்டு கிளர்ச்சியாளர்கள் ஆகியோர் தங்கள் சுய லாபத்திற்காக பயன்படுத்தி வருவதாகவும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. இரு மாநில அரசுக்கு இரகசியமாக அனுப்பப்பட்ட மத்திய அரசின் இந்த குறிப்பு முன்னணி தொலைக்காட்சி ஊடகத்தால் கண்டறியப்பட்டுள்ளது. (இ)

## அடிக்கல் நாட்டுவிழா

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் 2 கோடியே 20 இலட்சம் ரூபா நிதி பங்களிப்புடன் சேவாலங்கா நிறுவனத்தின் சேவாலங்கா நிறுவனத்தின் ஊடாக துணுக்காய் ப.நோ. கூட்டுறவு சங்கத்திற்கு அரைக்கும் ஆலையொன்றிற்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு துணுக்காயிலிருந்து கல்விளான் செல்லும் வீதியில் அமைந்துள்ள குறித்த சங்கத்திற்குரிய காணியில் இடம்பெறவுள்ளதாக இச்சங்கத்தின் பொது முகாமையாளர் தங்கராசா சுதாகரன் தெரிவித்துள்ளார்.

சங்கத் தலைவர் க.யோகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு, யு.என்.எச்.சி.ஆர். நிறுவன தலைமையதிகாரி எஸ்.மாரின் மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன். முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.பாலச்சந்திரன் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளனர். (2-15)

# 400 அடி பள்ளத்தில் பஸ் விழுந்து விபத்து

## 15 பேர் பலி; பலர் படுகாயம்

இமாச்சல பிரதேசத்தின் கின்னார் மாவட்டத்தில் தனியார் பஸ் பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியதில் 15 பேர் பலியானார்கள்.

சங்லா பள்ளத்தாக்கில் இருந்து கல்பாவுக்கு நேற்று சுமார் 35 பயணிகளுடன் தனியார் பஸ் சென்று கொண்டிருந்தது.

ரோத்ரங் கிராமத்தில் சென்ற போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ், 400 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்தது. இந்த கோர விபத்தில் சாரதி, நடத்துநர் உட்பட 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

17 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் 4 பேரின நிலை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சங்லா மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை அடையாளம் காணும் பணியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

இதேபோல், சுல்லிங்-டாப்ரி வளைவு சாலையில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டு வாகனம் மீது மண்குவியல் மற்றும் பாறைகள் விழுந்ததில் 2 பேர் உயிரோடு நிலத்தில் புதைந்துள்ளனர். (இ)

# இரும்புப் பெண்மணி விடுதலையானார்

மத்திய அரசின் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை இரத்து செய்யவேண்டும் என்ற கோரிக்கையுடன் மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்த இரும்பு பெண்மணியான ஐரோம் ஷர்மிளா 2000 ஆம் ஆண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். உணவு உண்ண மறுத்த அவரை கைது செய்து அவர் மீது தற்கொலை முயற்சி வழக்கு பதிவு செய்த பொலிசார், அவரை வைத்தியசாலையில் சேர்த்து பலவந்தமாக டியூப் மூலம் திரவ உணவை செலுத்தி வந்தனர்.

அவர் மீதான வழக்கை விசாரித்து வந்த மணிப்பூர் செசன்ஸ் கோர்ட் 14 ஆண்டுகளுக்குப் பின்னர் இரு தினங்களுக்கு முன் தீர்ப்பளித்தது. ஐரோம் ஷர்மிளா மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அரசுத் தரப்பு தவறியதாக கூறிய நீதிபதி, நீதிமன்றக் காவலில் இருக்கும் அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார். இதையடுத்து அவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார். அத்துடன் அவருக்கு கட்டாயமாக உணவு செலுத்துவதற்காக இத்தனை ஆண்டுகளாக அவரது மூக்கில் பொருத்தப்பட்டிருந்த டியூபும் அகற்றப்பட்டது. (இ)

## வடக்கு மாகாண சபைமுன்

# விஞ்ஞான மீன்பிடியியல் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்



விஞ்ஞான மீன்பிடியியல் பட்டதாரியிகள் வடக்கு மாகாணசபை முன்பாக ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

சபை ஆரம்பமாகிய போது நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டம் முற் பகல் 11.00 மணி வரை நீடித்திருந்தது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முதலமைச்சரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். (செ-4)

## இடி, மின்னலால் கணனிகள் சேதம்

(தும்பளை)

வடமராட்சி பகுதியில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் திடீரென இடியுடன் கூடிய மழை பெய்ததால் வடமராட்சி, மருதங்கேணி பிரதேச செயலகத்தின் இலத்திரனியல் சாதனங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தின் கணக்காய்வுப் பிரிவில் இரண்டு கணனிகள், நிர்வாகப் பிரிவில் ஒரு கணனி என சேதமடைந்துள்ளதுடன் அருகில் உள்ள சமுர்த்தி வங்கியில் இரண்டு கணனிகள் உட்பட இலத்திரனியல் பொருட்கள் சேதமடைந்துள்ளது எனத் தெரியவருகிறது.


நேற்று பிற்பகல் திடீரென காற்றுடன்கூடிய மழையானது தொடர்ந்து இடி மின்னலுடன் பொழியத் தொடங்கியது. இதனால் வடமராட்சி மக்கள மிகுந்த பயப் பீதியுடன் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-19)

# வடக்கு மாகாண சபைக்கு சைக்கிளில் வந்தார் அனந்தி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் சுழிபுரத்திலிருந்து வடக்கு மாகாண சபைக்கு சைக்கிளில் வந்துள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினருக்கு பாதுகாப்பின்மை, எரிபொருள் கொடுப்பனவுப் பற்றாக்குறை என்பவற்றைச் சுட்டிக்காட்டியே அவர் இவ்வாறு சைக்கிளில் பயணம் செய்துள்ளார்.



வடக்கு மாகாண சபையின் 14 ஆவது அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில நடைபெற்றது.

இவ் அமர்விற்கு வருகை தந்த அனந்தி சசிதரன் சுழிபுரத்திலுள்ள தனது வீட்டிலிருந்து கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை கட்டடத்திற்கு பயணித்துள்ளார்.

உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவு பற்றாக்குறையாக உள்ளமை, மாகாண சபை உறுப்பினர்களுக்கு போதிய பாதுகாப்பின்மை என்பவற்றை சுற்றிக்காட்டியே சைக்கிள் வண்டியில் இவர் வந்துள்ளார்.

நல்லூரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதலமைச்சரினை சைக்கிளோட அழைத்ததிலும் பார்க்க என்னை அழைத்திருந்தால் அவரைவிட வேகமாக ஓடியிருப்பேன் என நகைச்சுவையாக அனந்தி கூறினார். (செ-4)

# புற்றுநோய்க்கு வருடாந்தம் 11 ஆயிரம் பேர் பலி

புற்றுநோய் காரணமாக வருடாந்தம் 11,226 பேர் உயிரிழப்பதாக பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டின் மொத்த மரணங்களின் எண்ணிக்கையில் இது 8.8 வீதமாகும்.

2012-ம்ஆண்டில்புற்றுநோய்காரணமாக ஒரு மாத வயது முதல் 18 வயதானவர்கள் 677 பேர் உயிரிழந்துள்ளனர். அண்மைக்காலமாக புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூயோர்க்கில் ஜனாதிபதிக்கு எதிராக நாடு கடந்த தமிழீழ அரசு போராட்டம்!

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் வருடாந்த கூட்டத்தில் உரையாற்ற இருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விற்கு எதிராக, வட அமெரிக்கத் தமிழர்களை அணிதிரட்டி மாபெரும் நிகழ்வொன்றுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தயாராகி வருவதாக தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், நியூயோர்க்கில் ஐ.நாவின் முன் பொங்குதமிழ ஒன்றுகூடலாக இந்த ஒன்றுகூடல் இடம்பெற இருக்கின்றது.

இந்தியாவில் புதிதாக ஆட்சிபீடமேறியுள்ள புதிய அரசாங்கத்தின் பிரதமரான நரேந்திர மோடியும், சபையில் பங்கெடுக்க இருப்பதனால், முக்கியத்துவம் கொடுத்து இந்த எழுச்சி ஒன்றுகூடலை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகின்றது.

தமிழர்களுக்கு எதிரான அரசின் இன வழிப்பினை அம்பலப்படுத்தி, அரசுத் தலைவருக்கு எதிரான வலுவான குரலினை பதிவு செய்வதோடு, ஈழத்தமிழர்களுக்கான பரிகார நீதியினை அனைத்துலக சபையின் முன் உறுதிபடக் கோருவதற்குமாக இந்த எழுச்சி ஒன்றுகூடல் அமையவிருக்கின்றது.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களிலும் இருந்து மக்கள் பங்குபற்றுவதற்கான வழிமுறைகளோடு, கனடாவில் இருந்தும் மக்கள் பங்கெடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளன.

இதேவேளை செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனிதவுரிமை சபையின் முன் அணிதிரள்வதற்கு ஐரோப்பிய தமிழர்கள் தயாராகி வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 20 வர்த்தகர்களுக்கு தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 20 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றங்களால் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அதிகார சபை அதிகாரிகளால் கடந்த 20 நாட்களாக யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிறை குறைந்த பாண் விற்றமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களின் விலைகளைக் காட்சிப்படுத்தாமை மற்றும் அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களை மேற்கொண்ட 20 வர்த்தகர்களுக்கு எதிராகவே இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டன.

இதன்போதே, நீதிமன்றங்கள் மேற்படி தொகையை தண்டமாக அறவிட்டன என சபையினர் மேலும் தெரிவித்தனர். (இ)


## வாடகைக்கு உண்டு

வேம்படி வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்தில் மேல்மாடி இரண்டு அறைகள், சமையலறை, இணைந்த குளியலறை மற்றும் மலசல கூட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-021 222 6836,
(சி-8239) 077 8999716



## இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 36 ¾ செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L /வியாபாரம் (கனடா - சிற்றிசன்)
தொ.இ: B/361

பிறப்பு: 1967 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 44 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Computer Engineering / சொந்த வியாபாரம்
தொ.இ: B/1749

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 36 ¼ செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/நிரந்தர வேலை (பிரான்ஸ் PR)
தொ.இ: B/1752

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: 62 ½ செவ் 8 இல்
உயரம்: 180 cm
தகைமை/தொழில்: A/L/இத்தாலி (Work Permit)
தொ.இ: B/1761

**மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 20 செவ் 12 இல்
தகைமை/தொழில்: BBA /வங்கியாளர்
தொ.இ: G/2614

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 56 சூரி செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/2615

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: 28 ½ சூரி செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BBA/ அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ: G/2619

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 16 ¼ சூரி செவ் 3 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: BSc (Q.S) - Following
தொ.இ: G/2962

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





உ
மகாமாரி அம்மன் துணை

## யா/ அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில்

# கல்யாண மண்டப திறப்பு விழா

## 22.08.2014.

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் கல்யாண மண்டபம் இன்று 22.08.2014ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்க மகாமாரி அம்மன் திருவருள் கூடியுள்ளது.

**நிகழ்ச்சி நிரல்**

22.08.2014 - வெள்ளிக்கிழமை காலை 07.52 தொடக்கம் 09.39 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் படஸ்தாபனம்.

**காலை 10.00 மணி தொடக்கம்,**

மாலை மரியாதை: குருமார், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள்.
நாடா வெட்டுதல்.
தீபமேற்றுதல்.

**நிகழ்ச்சிகள்.**

1. தேவாரம்.
2. தலைமை உரை - திரு. சு. கமலநாதன். (தலைவர், யாழ். அ.பி.ம.அ. கோவில்)
3. வரவேற்புரை - திரு. ந. குகதாசன். (உப தலைவர், யாழ். அ.பி.ம.அ. கோவில்)
4. சிறப்புரை - திரு. சு. சண்முகரட்ணம். (பரிபாலன சபை உறுப்பினர், யாழ். அ.பி.ம.அ. கோவில்)
5. சிறப்பு விருந்தினர் உரை.
   (1) திரு. பி. செந்தில் நந்தனன். (பிரதேச செயலர், பிரதேச செயலகம், நல்லூர்)
   (2) திரு. வி. சுதாகர். (பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி சபை)
6. பிரதம விருந்தினர் உரை - திரு. ஆறு திருமுருகன். (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
7. நன்றியுரை - திரு. செ. ஜெயபாலன். (கௌரவ செயலாளர், யாழ். அ.பி.ம.அ. கோவில்)
8. தேவாரம்.
9. இசைக்கச்சேரி.
10. விருந்துண்ணல்.

இத்திறப்பு விழா நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
திருமண மற்றும் சுபகாரிய நிகழ்வுகளுக்கான முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

தொடர்புகளுக்கு: 021 221 1200. (சி-8257) பரிபாலன சபை, யாழ். அ.பி.ம.அ. கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரட்சிக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு வடக்கு மாகாணசபையில் குழு நியமனம்

## நேற்றைய அமர்வில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தற்போது நிலவும் வரட்சிக்கு உடனடியாக தீர்வினை பெறுவதற்கு வடக்கு மாகாணசபை விசேட குழுவொன்றினை நியமிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இவ் விசேட குழுவில் மாகாண சபை உறுப்பினர்கள் அதிகாரிகள் நிபுணர்கள் ஆகியோர் உள்வாங்கப்படவுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் 14 ஆவது அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் பேரவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

இவ் அமர்வில் அவைத்தலைவர் தெரிவிக்கையில்,

பருவமழை பொய்த்ததினால் ஏற்பட்டுள்ள பாரிய வரட்சியினால் வடமா காணத்தின் பல பகுதிகளிலும் குறிப் பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் பொதுமக்கள் குடி தண்ணீரின்றி துன்பப்படுவதுடன் கால் நடைகளும் குளங்கள் போன்ற நீர் நிலைகளில் நீரின்மையால் தண்ணீருக்காக அலைவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான இயற்கை அனர்த்தங்களை கையாள்வதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை வடக்கு மாகாண சபைமேற்கொள்ள வேண்டிய பொறுப்பின் அடிப்படையில் தற்போதைய பாதிப்புக்கள் பற்றிய தகவல்களையும் தரவுகளையும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக திரட்டவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளை உடனடியாகவும் எதிர்காலத்திலும் கையாளக்கூடிய திட்டங்களை வகுக்கவும் அவற்றை நிறைவேற்றுவதற்கான பொருத்தமான வழிமுறைகளை இனங்காணவும் அதிகாரிகளையும்நிபுணர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றை உடனடியாக நியமித்து நடவடிக்கை எடுப்பதென இச்சபை தீர்மானிக்கிறது என்ற பிரேரணை முன் மொழியப்பட்டுநிறைவேற்றப்பட்டது.

இதே வேளை வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவுகின்ற கடும் வரட்சியை கட்டுப்படுத்த அல்லது அதற்குதீர்வினை ஏற்படுத்தும் வகையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு செயற்பட்டு வருகின்றது.

ஆனையிறவு அணைக்கட்டு தற்போது 100 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

தற்போது அவ் அணைக்கட்டு புனரமைக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் 500 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட வேண்டி வருமென வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார். (இ-4)

# போலி கடனட்டைகளைப் பயன்படுத்தி மதுபானப் போத்தல்கள் கொள்வனவு

## மலேசியர் இருவர் கைது

48 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மதுபான போத்தல்களுடன் மலேசிய பிரஜைகள் இருவர், குற்றத்தடுப்பு பிரிவினரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரில் பெண்ணொருவரும் அடங்குகின்றார். கடந்த 19ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ள இவர்கள், 5 நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்து போலி கடனட்டைகள் மூலம் இந்த மதுபான போத்தல்களை கொள்வனவு செய்துள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள 5 நட்சத்திர ஹோட்டல்கள் ஐந்திலிருந்து இந்த மதுபான(விஸ்கி) போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவை தலா 9 இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மலேசியர்களை கைது செய்த குற்றத்தடுப்பு பிரிவினர், அவர்களிடமிருந்து 25 போலி கடனட்டைகளையும் மதுபான போத்தல்களையும் கைப்பற்றியுள்ளனர். இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

# பாவனைக்குதவாத அழகு சாதனப்பொருட்கள்

(கொழும்பு)

நாட்டில் இயங்கி வருகின்ற அழகுக் கலை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளின் போது பாவனைக்குதவாத அழகு சாதனப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாவனைக்குதவாத அழகு சாதனப் பொருட்கள் வைத்திருந்த அழகுக் கலை நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வாசனைத் திரவியங்கள் மற்றும்ஔடதங்கள் அதிகார சபை யின் பணிப்பாளரும், சுகாதார அமைச்சின் மேலதிக செயலா ளருமான அமல் ஹர் ஷ டி சில்வா தெரிவித்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 |
| தக்காளி | 50 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 60 | 70 | 80 |
| கரட் | 80 | 80 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 70 | 100 |
| பயற்றங்காய் | 40 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 20 | 50 | 60 |
| போஞ்சி | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 80 | — |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 113

ராமச்சந்திரன் ராஜ்காந்




டொறின் மன்மதநாயகம்



கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்

**ஒரு பையன் exam இல பாஸ் ஆயிட்டா**

அப்பா:– என் பையன்னு நிருபிச்சிட்டா
அம்மா:– எல்லாம் கடவுள் கிருபை
டீச்சர்:– என்னோட கோச்சிங் தான் காரணம்
காதலி:– I LOVE YOU- da
நண்பன்:– வாடா மச்சான் தண்ணி அடிக்கலாம்

**அதே பையன் exam இல பெயில் ஆயிட்டா**


அப்பா:– தறுதல உன்னையெல்லாம் திருத்தவே முடியாது
அம்மா:– எல்லாம் இந்த TV; Facebook ஆல வந்துச்சி
டீச்சர்:– Classஇல கொஞ்சமாவது கவனிச்சாத் தானே. கடைசி பெஞ்சுல இருந்து கதையடிச்சா இப்படித்தான்
காதலி:– இதுக்கு நான் பொறுப்பு இல்லடா
நண்பன்:– வாடா மச்சான் தண்ணி அடிக்கலாம்

நட்பு மட்டுமே என்றும் மாறாதது...!

ஹரிஸ் கோகுல்




தர்ஷ் தர்ஷசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடத் தடை



அரசியல்வாதிகள் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு அது நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது ஆனால் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என அமைச்சர் ஜோன் செனவிரட்ன நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாய் மூல கேள்வி விடைக்கான நேரத்தின் போது ஐ.தே.கட்சி எம்.பி ரோசி சேனாநாயக்க எழுப்பிய கேள்விக்கு அரச தரப்பு பிரதம கொறடா தினேஸ் குணவர்த்தனவுக்கு பதிலாக பதிலளிக்கும் போதே அமைச்சர் ஜோன் செனவிரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பாலியல் வல்லுறவு தொடர்பில் 450 பேரும் பெண் கொலைகள் தொடர்பில் 40 பேரும் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாலியல் வல்லுறவுக் குற்றங்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டு 158 பேரும் 2009 இல் 98 பேரும் 2010 இல் 86 பேரும் 2011 இல் 52 பேரும் 2012 இல் 60 பேருமாக மொத்தமாக 450 பேர் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டனர்.

அதேபோன்று பெண்களை கொலை செய்த குற்றங்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டில் 16 பேரும் 2009 இல் 13 பேரும் 2010 இல் 4 பேரும் மொத்தம் 40 பேர் குற்றவாளிகளாக காணப்பட்டனர்.

இக்குற்றங்கள் தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களில் அரசியல்வாதிகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறான குற்றங்களில் அரசியல்வாதிகள் ஈடுபட்டால் அவர்கள் பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது.

ஆனால் ஏனைய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களுக்கு உரிமையுண்டு அதனை சட்டம் தடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தலதா மாளிகையிலிருந்தும் சிலைகள் திருடப்பட்டுள்ளன

(கொழும்பு)

பல அடுக்கு பாதுகாப்புகளுக்கு மத்தியிலுள்ள கண்டி ஸ்ரீதலதா மாளிகையிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட விலை மதிக்க முடியாத புத்தர் சிலைகள் நான்கையும் ஒரு தூபியையும் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்துள்ளனர்.

தலதா மாளிகையில் சேவை செய்த ஒருவரும் அந்த சிலைகளை வாங்கிய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான இவ்விருவரையும் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# எலும்புக்கூடும் மோட்.குண்டும் மீட்பு!



மட்டக்களப்பு வாகரையிலுள்ள ஊரியன்கட்டில் கைவிடப்பட்ட காணி ஒன்றிலிருந்து 2 மோட்டார் ஷெல் குண்டினை நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்டு அவற்றினை செயழிலக்கச் செய்துள்ளதாக வாகரை பொலிசார் தெரிவித்தனர்.

வாகரை 233 ஆவது இராணுவப் படைப்பிரிவினருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலினையடுத்து குண்டு காணப்பட்ட இடத்திற்கு குறித்த படைப்பிரிவினர் சென்று அவற்றை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

மேற்படி குண்டுகளை குண்டு செயல் இழக்கச் செய்யும் இராணுவப் பிரிவினர் செயழிலக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் எலும்புக் கூடுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொக்கட்டிச்சோலை பகுதியில் உள்ள வயல்வெளி ஒன்றிலேயே மேற்படி எலும்புக் கூடுகள் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதனுடன் அடையாள அட்டை, புகைப்படம் மற்றும் உடைகள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் அண்மையில் மீட்கப்பட்ட மண்டையோட்டின் பகுதிகளாகவே குறித்த எலும்புக் கூடுகள் இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்ற களுவாஞ்சிக்குடி நீதவான் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

## தெய்வீக இசையரங்கு

நல்லூர்மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளம் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்குதினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய தினம் இடம்பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் திருமதி தாரணி ராஜ்குமார், வயலின் பாக்கிய லக்சுமி நடராசா, மிருதங்கம் ஆர்.கஜா னனன், தபேலா பி.சியாம் கிருஷ்ணா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## ஆன்மீக அருளுரை

நல்லூர்முருகப்பெருமான்ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால்வழங்கப்பட்டு வருகின்றது. இன்றையதினம் அன்பே சிவம் எனும் தலைப் பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

## இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தைமுன்னிட்டுநல்லூர்சைவமகா சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப் பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரைநல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ. வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் இன்று போய் நாளை வா எனும்தலைப்பிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.


## இசை நிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசைநிகழ்ச்சி தினமும்மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வில் பிரம்ம ஸ்ரீ எ.ஜி. சுவாமிநாத சர்மா வழங்கவுள்ள இசைக்கானம் இடம்பெறவுள்ளது.

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர்மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களம்நடத்தும்ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் சைவப்புலவர் ச.நவநீதன் வழங்கவுள்ள இந்து மதம் காட்டும் அறிவியல் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் பொலிகண்டி விநாயகர் அறநெறிப் பாடசாலை,மாதகல் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை கந்தசெல்வாபுரம் கன்னிவளவு பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சங்கத்தானை இத்தியடி இந்து இளைஞர் அற நெறிப் பாடசாலை,பன்னாலைமுத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளகலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ)





## வரங்கள் எல்லாம் பெறுவோம் உன்னாலே



அன்பை அதிகரிப்பாய் உன் அருளாலே
ஆணவத்தை அழிப்பாய் உன் அருளாலே
இன்பத்தை அளிப்பாய் உன் அருளாலே
ஈகை செய்வாய் உன் அருளாலே
உண்மையை உயர்த்துவாய் உன் அருளாலே
ஊழல்களை அழிப்பாய் உன் அருளாலே
எதையும் தருவாய் உன் அருளாலே
வரங்களை பெறுவோம் உன்னாலே

**ச.சுபபிரியன்(யாழ்.இந்து கல்லூரி)**

## எழில் கொஞ்சும் நல்லூரா



எழில் கொஞ்சும் நல்லூரா
ஏறுமயிலேறி நீள் உலகை சுற்றியவா
மயிலேறும் மயூரனே மாணிக்கமே
மாட்சிமை மிகு யாழ். பாடியில்
குடிகொண்ட குறவள்ளி மணாளா
தமிழ் கொஞ்சும் தணிகை வேலா
தமிழர்குறை தீர்த்து தரணியாளும் வேலா
அழகுறையும் நல்லூர் பதியுறை நாதா
ஆறுமுகம் அணிசெய்ய அருள் பொழிவாய்
ஏற்றுயர் கொடியுடை நல்லூர் பதியமர்ந்து

**தனரூபன் (நாவற்குழி)**

## உன் துணை வேண்டியே



தாளாத துயரும் அதனைத் தாங்கொணாத்
தளர்வும் துவட்டும் பசிவயிற்றுள் தீயுமாக
தேளாகி கொட்டும் தீயோரின் தொல்லையும்
தட்டிக் கொடுக்காத உறவும் இழிவிடவே
கோளாற்றும் வினையும் விடுபட முடியாவிதியுமாக
உள்ளம் விதிர்க்க உன் துணை வேண்டியே
உனை சரனென நல்லைத் தலைவாசலில்
ஓலமிட்டழுதவாறு நிற்கின்றேன் ஐயா

**கலைப்பரிதி சிவ.சிவநேசன்**

## புண்ணிய பூமியில் தோற்கலாமா?



உலகெங்கணும் அழுகுரல்கள் ஓங்கி
உரத்து ஒலிக்கிறது-முருகா
ஒன்று மறியாப் பிஞ்சுக் குழந்தைகள்
உணவின்றி இறக்கிறது-முருகா
கலகமுள்ள காஸாவிலும் முருகா
கணக்கின்றி கதை முடிகிறது
கைநிறைய அள்ளித்தந்த வன்னியிலும்
கன குடும்பங்கள் வாடுகிறது
புலம்பெயர் நாடுகள் போற்றினாலும்
புண்ணிய பூமியில் நாம் தோற்கலாமா

**கே.எஸ்.சிவஞானராஜா (கொக்குவில்)**

## நல்லைக் கந்தன் நனிவெண்பா



எள்ளளவு மாற்றலில்லாச் சிறியேனின் மனமிருந்து
தெள்ளுதமிழ் பாடென்று செப்பியவா-உள்ளம்
உருகியும் வணங்கியும் உன் நல்லூற் பதி நின்றேன்
முருகப்பா நீயே முதல்

**கலாபூஷணம் சந்தக் கவிஞர்**
**நவ.பாலகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நரியும் போர் முரசும்!

...நேர்மையோடு நடப்பது. உறுதியோடு இருப்பது, சோதனைகளில் தேறுவது.

பளபளப்பாகப் பிரகாசிப்பது ஆகிய நான்கு பண்புகளும் உடைய அமைச்சர்களே அரசாட்சி நடத்தத் தகுதி உடையவர்கள்.

வீட்டுக்குத் தூண்கள் எப்படியோ அப்படியே அமைச்சர்கள் அரசுக்கும் தூண்கள் போன்றவர்கள்.

நட்பு முறியும்போது அதைச் சீர்படுத்தி இணைத்து வைப்பதில்தான் அமைச்சரின் மதிநுட்பம் வெளிப்படுகிறது. கொடிய நோய் உண்டாகும் போது மருத்தவனின் அறிவு வெளிப்படுகிறது .


நெருக்கடி இல்லாத சாதாரண காலத்தில் எல்லோருமே அறிவாளிகளாகத்தான் இருப்பார்கள் என்று கூறியுள்ளது முற்றிலும் உண்மையே.

மகிழ்ச்சியோடு சஞ்சீவகனைக் காணச் சென்ற தமனகன் வழியில் யோசிக்கத் தொடங்கியது.

ஆகா! இப்போது அரசர் என்மீது கருணையோடு அன்பு செலுத்தத் தொடங்கிவிட்டார்.

நான் சொல்வதையெல்லாம் இனி மேல் தட்டாமல் கேட்பார். என்னைக் காட்டிலும் அதிர்ஷ்டசாலி யாரும் இல்லை.

குளிர் காய்வதற்கு நெருப்பு கிடையாது. பிரியமானவர்களைக் காண்ர்ந்து அதர்மத்தால் பாவங்கள் குவிவது போல் அரசனிடத்தில் சக்திகள் குவிந்து கிடக்கின்றன. அதனால் அரசன்;



பது, பால் சோறு உண்பது. அரசனிடம் பரிசு பெறுவது இந்நான்கும் அமிர்தத்துக்கு இணையானவை என்று எண்ணியது.

தமனகன் சஞ்சீவகனைக் கண்டு மரியாதையோடு நண்பனே! உன்னைப் பற்றி எடுத்துக் கூறி அரசரைத் திருப்திப்படுத்தியிருக்கிறேன்.

உனக்கு அவர் அடைக்கலம் தந்திருக்கிறார். இனி நீ கவலையில்லாமல் அவரிடம் வரலாம். ஆனால், அரசரின் அபிமானத்தைப் பெற்ற பின்னரும் என்னிடம் நீ இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

கர்வத்தோடு என்னை அதிகாரம் செய்யக் கூடாது. நானும் உன்னோடு சேர்ந்து அமைச்சர் பதவிபெற்று ராஜ்யத்தின் ஆட்சியை வகித்து வருவேன்.

இருவரும் சேர்ந்து ராஜ்ய அதிர்ஷ்டத்தை அனுபவிக்கலாம் என்று கூறியது.

மேலும் தொட

ஒருவனை ஆதரித்து வெகுமதி கொடுத்து ஆதரிக்கிறான்.

அதே சமயம் அவனே இன்னொருவனுக்கு தண்டனை கொடுத்துத் துன்புறுத்தவும் செய்கிறான்.

மற்றொருவனை மிருகத்தைக் கொல்வதுபோல் கொன்றும் விடுகிறான்.

அரசனின் ஊழியனைக் கர்வத்தால் சரியாக நடத்தாதவன், வியாபாரி தந்திலனைப்போல் துன்பப்படுவான் என்றது தமனகன்.

அது எப்படி? என்று சஞ்சீவகன் கேட்டது.

தமனகன் சொல்லத் தொடங்கியது.

..........................................

வர்த்தமானம் என்ற நகரில் தந்திலன் என்ற வியாபாரி ஒருவன் வாழ்ந்து வந்தான்.

அவன் பெரும் செல்வந்தன்.

சிற்றூர் எல்லாவற்றுக்கும் அவனே அதிகாரி.

நகர அலுவல்களையும் ராஜ்ய காரியங்களையும் அரசன் சார்பாக அவன் பார்த்து வந்தான்.

அப்பொழுது குடிமக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதும், அவர்களுடன் நெருங்கிப் பழகுவதும் அவனுடைய இயல்பு.

அதில் மிகவும் திறமை பெற்றவனாக, விளங்கினான் அவன்.

அங்குள்ள பொதுமக்களும் மிக்க மகிழ்ச்சியோடு இருந்தனர்.

அரசனின் ஆதரவையும் பாராட்டையும் பெற்றவனை பொதுமக்கள் விரும்பாமல் வெறுக்கின்றனர்.

பொது மக்களின் ஆதரவையும் பாராட்டையும் பெற்றவனை அரசன் விரும்புவதில்லை....................

(தொடரும்)

## 08.2014 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1639 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் நாயககர்களிடமிருந்து வாங்கிய நிலத்தில் மதராஸ நகரத்தை (தற்போதைய சென்னை) அமைத்தார்கள்.
- 1642 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் ஆங்கில நாடாளுமன்றத்தை "துரோகிகள்" என வர்ணித்தான். ஆங்கில உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1717 - ஸ்பானியப் படைகள் சார்டீனியாவில் தரையிறங்கினர்.
- 1770 - ஜேம்ஸ் குக் தனது ஆட்களுடன் ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரையை அடைந்தான்.
- 1780 - கப்டன் ஜேம்ஸ் குக்கின் கப்பல் (HMS Resolution) இங்கிலாந்து திரும்பியது. (ஹவாயில் குக் கொல்லப்பட்டான்).
- 1798 - ஐரியக் கிளர்ச்சிக்கு ஆதரவாக பிரெஞ்சுப் படைகள் அயர்லாந்தில் தரையிறங்கினர்.
- 1848 - நியூ மெக்சிகோ ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1860 - பிரித்தானியக் கடற்படையின் உதவியுடன் கரிபால்டியின் படைகள் சிசிலியிலிருந்து இத்தாலியின் பெரும்பரப்பினுள் நுழைந்தனர்.
- 1864 - 12 நாடுகள் இணைந்து ஹென்றி டியூனாண்ட் தலைமையில் ஜெனீவாவில் செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்.
- 1875 - சக்காலின் மற்றும் கூரில் தீவுகள் தொடர்பாக ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சென் பீட்டர்ஸ் பேர்க்கில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1910 - கொரியா-ஜப்பான் இணைப்பு ஒப்பந்தம் கைச்சாததானது. இரண்டாம் உலகப் போர் முடியும்வரையில் கொரியா ஜப்பானின் ஆட்சியின்கீழ் இருந்தது.
- 1911 - பாரிசில் களவெடுக்கப்பட்ட மோனாலிசா ஓவியம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தில், பிரித்தானியாவும் ஜேர்மனியும் முதன் முதலில் நேரடியாகப் போரில் ஈடுபட்டனர்.
- 1926 - தென்னாபிரிக்கா, ஜோகானஸ்பேர்க்கில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1932 - தொலைக்காட்சி சேவையை முதன் முதலாக பி.பி.சி சோதித்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மன் படைகள் ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்பேர்க்கை அடைந்தனர் லெனின்கிராட் மீதான முற்றுகை ஆரம்பமானது
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி மீது பிரேசில் போரை அறிவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் ருமேனியாவைக் கைப்பற்றியது.
- 1949 - கனடாவில் 8.1 அளவு நிலநடுக்கம் பதிவாகியது.
- 1962 - பிரெஞ்சு அதிபர் சார்ல்ஸ் டி கோல் மீதான கொலை முயற்சி தோல்வியடைந்தது.
- 1972 - ரொடீசியா ஒலிம்பிக் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டது.
- 1978 - சண்டினீஸ்டா படைகள் நிக்கராகுவாவின் தேசிய அரண்மனையைக் கைப்பற்றினர்.
- 1989 - நெப்டியூனின் முதலாவது கோள் வளையம் கண்டுபிடிக்கப்பட்ட்டது.
- 1991 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிராவ்தா பத்திரிகை மூடப்பட்டது.


பிறப்புகள்

- 1877 - கலாயோகி ஆனந்த குமாரசுவாமி (இ. 1947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2014 - 16.09.2014



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**எண்ணங்களை எளிதில் செயலாக்க எப்பொழுதும் விழிப்பாக இருக்கும் சிம்ம இராசி அன்பர்களே!**

**சொத்துக்களால் இலாபம் கிட்டும்!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசி நாதன் சூரியன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். அதுமட்டும் அல்லாமல் சூரியனுடன் தன லாபாதிபதி புதனும் இணைந்து இருக்கிறார். எனவே வருமானம் போதுமானதாக இருக்கும். வளர்ச்சியிலிருந்த தளர்ச்சி அகலும். இனத்தார் பகை மாறும். ஏற்ற பணியை இனிதே செய்து முடிப்பீர்கள். கூட்டுத் தொழில் புரிவோர் தனித்தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

புத ஆதித்ய யோகமும், குரு சுக்ர சேர்க்கையும் எண்ணியதை முடித்துக் கொடுக்கும். கன்னியும் ராகுவும் ஏற்ற விதத்தில் செயற்படும் இந்த மாதத்தில் நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்லகாரியம் பலவற்றையும் செய்து முடிக்கப்போகிறீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

செவ்வாய்ப் பெயர்ச்சிக்குப் பின்னால் மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரப்போகிறது. குறிப்பாக சுகாதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து செயற்படுவார்கள். ஒருசிலர் புதிய கடை திறப்பு விழாக்களையும், கட்டடத் திறப்பு விழாக்களையும் நடத்தி மகிழ்வார்கள். மாமன், மைத்துனர் வழியிலிருந்த மனக்கசப்புகள் அகலும். சேமிப்பு உயரும். தேசப்பற்று மிக்கவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். என்ன இருந்தாலும் சனி, செவ்வாய் சேர்க்கை ஆகஸ்டு 30 ஆம் திகதி வரை இருக்கிறது.

சகாய ஸ்தானத்தில் 2 கிரகமும் இணையும் பொழுது, சில தொல்லைகளும் உருவாகலாம். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம். கொடுக்கல்- வாங்கல்களில் சில ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். அதன் பார்வை பலத்தால் பெற்றோர் வழிப் பிரியம் குறையலாம். எனவே, அதற்குரிய சிறப்புப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. வராஹி வழிபாடு வளர்ச்சியில் ஏற்படும் தளர்ச்சியைப் போக்கும். சதுர்த்தியன்று விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஆகஸ்ட் 26 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக புதன் உச்சம் பெறுவதால் மிகுந்த வளர்ச்சி ஏற்படும். பொதுவாக உங்கள் ராசி அடிப்படையில் தன லாபாதிபதியாக புதன் விளங்குவதால், அது வலிமையடையும் இந்த நேரம் வருமானம் அதிகரிக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். திருமணத் தடை அகலும். தெய்வப் பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு வையகம் போற்றும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

விருச்சிக ராசியில் செப்டம்பர் 1 ஆம் திகதி முதல் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். சுகாதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சகல சௌகரியங்களும் கிடைக்கும். தாய்வழி ஆதரவு பெருகும். பயணங்கள் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசிக் காரியங்களை சாதிப்பீர்கள். வாகனங்கள் வாங்க வேண்டுமென்ற நீண்ட நாள் கனவு நிறைவேறும். பூமி யோகமும் உண்டு.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**


சிம்ம ராசியில் அதே திகதியில் சுக்ரனும் வந்திணைகிறார். புதன், சுக்ர சூரிய சேர்க்கை மிகுந்த யோகத்தை வழங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பிறர் போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முற்படுவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அன்னிய நாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். இம்மாதம் ஆனைமுகப் பெருமான் வழிபாட்டை சதுர்த்தி நாளில் மேற்கொள்ளுங்கள். ஆறுமுகப் பெருமான் வழிபாட்டை செவ்வாய் தோறும் செய்து வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும் மாதமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். அடுத்த வீட்டாரின் பகை மாறும். குழந்தைகளின் படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். வீடு வாங்க முயற்சி செய்தவர்களுக்கு அனுகூலமான தகவல்வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். விநாயகர் வழிபாடு வேதனையைப் போக்கும். மாதத்தின் மையப்பகுதியில் அஞ்சல் வழியில் அனுகூலச் செய்தி வந்து சேரும்.

## சொத்துக்களால் இலாபம் கிட்டும்!

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**அமைதியைக் கடைப்பிடித்து ஆனந்தத்தை வரவழைத்துக் கொள்ளும் கன்னி இராசி நேயர்களே!**

**ஆகஸ்ட் 26 இற்கு மேல் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்திணையும்!**

ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வாக்கு ஸ்தானத்தில் செவ்வாயும், சனியும் இணைந்திருக்கிறார்கள். ஜென்மத்தில் ராகு சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கின்றார். எனவே, சர்பக் கிரகத்தின் ஆதிக்கத்தில் உங்கள் ராசி அமைந்துள்ளது.

மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் புதன் வலிமை இழந்திருக்கிறார். மேலும் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ஆனால் ஆகஸ்டு 26ஆம் திகதி உங்கள் ராசியிலேயே சஞ்சரித்து உச்சம் பெறப்போகிறார். எனவே, அதன்பிறகு நீங்கள் தொட்ட காரியம் வெற்றிபெறும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். அன்றாடப் பணிகளை நன்றாக முடிப்பீர்கள்.

பாயும், நோயும் என்றிருந்தவர்கள் மாற்று மருத்துவத்தின் மூலம் உடல்நலம் சீராகிப் பம்பரமாய் சுழன்று பணிபுரிவீர்கள். வீட்டிலுள்ள பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். வேற்று மனிதர்களோடு நீங்கள் செய்த கூட்டு முயற்சியில் இதுவரை இருந்த தாமதங்கள் அகலும். சனி விலகுவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே நல்ல பலன்களைக் கொடுக்கும் என்பார்கள். ஏழரைச் சனியின் பிடியில் சிக்கியவர்களுக்கு அது விலகும் சமயத்தில் வேண்டியதையெல்லாம் கொடுக்கும் என்பது சாஸ்திர நியதி.

ஆனால், தற்சமயம் அதோடு செவ்வாய் இணைந்திருக்கிறார். இந்த சனி, செவ்வாய் சேர்க்கை அவ்வளவு நல்லதல்ல. கோபத்தை அதிகரிக்கச் செய்யும். கொள்கைப் பிடிப்போடு செயற்படவிடாது. குடும்ப உறுப்பினர்களை பகைத்துக் கொள்ள நேரிடும். எனவே, யாருக்கும் வாக்கு கொடுக்கும் முன் ஒரு கணம் சிந்திப்பது நல்லது. சனி, செவ்வாய்க்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் முறைப்படி செய்தால் மணியான வாழ்க்கை அமையும். மகிழ்ச்சிக் கடலில் மிதக்க நேரிடும்.

செவ்வாய்ப் பெயர்ச்சிக்குப் பிறகு வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள முன்வருவீர்கள். இடம், பூமியால் லாபம் கிடைக்கும். எதிர்த்துப் பேசிய சகோதரர்கள் இணங்கி வருவர். மதிப்பும், மரியாதையும் உங்களுக்கு அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வழக்கில் வெற்றி கிடைக்கும்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

இதுவரை சிம்ம ராசியில் சஞ்சரித்து வந்த புதன் ஆகஸ்டு 26 ஆம் திகதி முதல் கன்னி ராசியில் உச்சம் பெறப்போகிறார். பொதுவாக ராசிநாதன் உச்சம் பெறும்பொழுது வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள முன்வருவீர்கள். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வரவு திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 1 ஆம் திகதி செவ்வாய் தனது சொந்த வீடான விருச்சிக ராசிக்குச் செல்கிறார். வெற்றிகள் ஸ்தானத்தில் அதற்குரிய ஸ்தானாதிபதி சஞ்சரிக்கும் பொழுது, எதிரிகள் சரணடைவர். லாப நோக்கத்தோடு உங்களோடு பழகியவர்கள் உங்களை விட்டு விலகுவர். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

அதே திகதியில் சிம்ம ராசியில் சுக்ரனும் சஞ்சரிக்கப்போகிறார். செவ்வாய் பெயர்ச்சியன்றே சுக்ரனும் சிம்மத்திற்கு பெயர்ச்சியாவதால் நன்மைகள் அதிகம் கிடைக்கும். நல்லவர்களின் தொடர்பால் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அலைச்சலுக்கேற்ற ஆதாயமும் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களால் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

இம்மாதம் கணபதி வழிபாடு உங்கள் கவலைகளைப் போக்கும். சனிபகவான் வழிபாடு சஞ்சலங்களைத் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொடக்கத்தில் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். வீட்டுத் தேவைகள் கடைசி நேரத்திலேயே பூர்த்தியாகும். புதன் உச்சம் பெற்ற பின்னால் புதிய திருப்பங்கள் பலவும் காணப்போகிறீர்கள். குடும்பச் சுமை குறையும். கொடுக்கல்- வாங்கல்களில் ஆதாயம் கிடைக்கும். மாதத்தின் மையப் பகுதியில் சகோதர வழயில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன்-மனைவிக்குளிருந்த மனக்கசப்புகள் மாறும. உறவினர்களின் இல்ல விழாக்களை முன்னினறு நடத்தி வைப்பீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். சர்ப்ப சாந்தி செய்து கொள்வது சந்தோஷத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

## அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்திணையும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# குடாநாட்டில் கடல் பாம்புகளின் பல்வகைமை



குட்டியுடன் கடல்பாம்பு

*(கடந்த வாரத் தொடர்ச்சி...)*

இதற்கான காரணமாக இவற்றின் உணவு முறையைக் கூறலாம். இவை குறிப்பிட்ட சில மீன் இனங்களையே உணவாக உட்கொள்கின்றன. Platycephalidae, Calli onymidae குடும்பத்தைச் சேர்ந்த இவ் இனங்கள் கடலின் அடிப்பகுதியில் வாழ்வதற்கு இசைவாக்கம் அடைந்தவையாகும். இவற்றின் உடல் அமைப்பு முதுகு, வயிற்றுப்புறம் தட்டையாக்கப்பட்டு காணப்படும். இவற்றினை உணவாக உட்கொள்ளும் இப்பாம்பு இனமும் தமது இரையைப் பிடிப்பதற்காக கடலின் அடிப்பகுதியில் நகர வேண்டி இருக்கும். இதனாலேயே இப்பாம்பு இனத்தில் வயிற்றுப்புறச் செதில்கள் சற்று விருத்தியடைந்து காணப்படுகின்றது எனக் கூறலாம்.

பொதுவாக கடற்பாம்புகள் கடலின் வெவ்வேறு மட்டத்தில் வாழ்கின்ற மீன் இனங்களை உணவாக உட்கொள்கின்றன. அத்துடன் கடல் வாழ் அங்கிகளின் முட்டைகள், Crustaceans, Mollusks போன்றவற்றையும் உணவாக உட்கொள்கின்றன என்பதை அவற்றின் உணவுக் கால்வாய்த் தொகுதியினை ஆய்வதன் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். கடற்பாம்புகளும் உணவினை முழுமையாக விழுங்குவதனால் அவற்றின் உணவினை அடையாளம் காணுவது இலகுவான செயன்முறையாகும். ஏனைய பாம்பு இனங்கள், பல்லி இனங்கள்போனறு இவற்றிலும் இரண்டு ஆண் குறிகள் (Penises) காணப்படுகின்றன. இருப்பினும் இவை Hemipenes எனவே அழைக்கப்படுகின்றது. இவை இரண்டும் தனித்தனியாக செயற்படக்கூடியதாக இருப்பினும் ஆண் பாம்பு ஒரு முறை இனக் கலப்பின் போது ஒரு ஆண்குறியை மாத்திரம் பயன்படுத்துகின்றது. பெரும்பாலும் இனக்கலப்பு கடலின் மேற்பகுதியிலே நடைபெறுகின்றது.

நீண்ட நேரமாக நடைபெறும் இனக் கலப்பில் பெண்பாம்பு சுவாசத்தை கட்டுப்படுத்துவதோடு நீரின் மேற்பரப்பில் நீந்தும். இதன் போது ஆண்பாம்பு வெளிநீட்டப்பட்ட ஆண் குறியை பெண் பாம்பின் இனப்பெருக்கத் தொகுதியினுள் உட்செலுத்துவதன் மூலம் இனச்சேர்க்கை நடைபெறும். இனச் சேர்க்கையின் பின்னர் ஆண், பெண் பாம்புகளை வேறுபடுத்தி இனம் காண்பது சிக்கலானதாகும். இருப்பினும் சில இனங்களில் அவற்றின் சில தோற்ற அமைப்புக்களைக் கொண்டு வேறுபடுத்தி அறிய முடியும். உதாரணமாக Hydrophis spiralis இன் ஆண்பாம்பு மெல்லியதாக காணப்படும் ஆனால் பெண் பாம்பு பருத்த தோற்றத்தை கொண்டிருக்கும். Lapemiscurtus, Thalassophina viperina இன் ஆண் பாம்புகளின் பிற்பகுதியில் காணப்படும் செதில்களில் முள்போன்ற தன்மை காணப்படும். ஆனால் பெண் பாம்புகளில் அவ்வாறு காணப்படுவதில்லை.

கடற்பாம்புகள் Ovoviviparous வகையைச் சேர்ந்தவை எனப்படுகின்றன. இருப்பினும் சில ஆராய்ச்சியாளர்கள் அவை Viviparous வகையைச் சேர்ந்தவை எனக் கூறுகின்றார்கள். எவ்வாறாயினும் முழுமையாக விருத்தியடைந்த குட்டிகளையே பெண் பாம்புகள் பிரசவிக்கின்றன. இவற்றின் கற்பகாலம் (Gestation Period) 4 தொடக்கம் 11 மாதங்கள் வரை காணப்படுகின்றன.

இது இனத்துக்கு இனம் வேறுபடுவதோடு ஒரு குறித்த இனத்தில் இடத்துக்கு இடமும் வேறுபடுகின்றது.

யாழ். குடாநாட்டில் உள்ள கடற்பாம்பு இனங்கள் அனைத்தும் Single spawner ஆக கருதப்படுகின்றது. அதாவது வருடத்திற்கு ஒரு முறை மட்டும் இனப்பெருக்க நடவடிக்கையில் ஈடுபட்டு குட்டி போடும் இயல்பைக் கொண்டுள்ளன. இவற்றில் பிள்ளைப பராமரிப்பு (Parentel care) அவதானிக்கப்படவில்லை. பெரும்பாலான இனங்களில் குட்டிகளும் (Juveniles) நிறையுடலிகளும் (Adult) வேறுபட்ட நிற அமைப்பைக் கொண்டுள்ளன.



வேறுபட்டவலைகளில் கடல்பாம்பு

கடற்பாம்புகள் உலகளாவிய ரீதியில் காலநிலை மாற்றத்தின் மூலமும், வாழிடம் அழிக்கப்படுவதாலும் மீன்பிடி நடவடிக்கைகளில் தவறுதலாக பிடிக்கப்படுவதாலும் (Fishing bycatch) பாதிக்கப்படுகின்றன. சில நாடுகளில் இவை உணவுத் தேவைக்காக பயனபடுத்தப்படுகின்றது. குறிப்பாக யாழ்குடா நாட்டில் Fishing by catch மூலம் இவ் இனங்கள் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக வடமராட்சி கடற்பரப்பில் Gillnet எனப்படும். மீன்பிடி உபகரணமே அதிகளவில் பாவிக்கப்படுகின்றது.

இவற்றினை அவர்கள் நள்ளிரவில் கடலில் போட்டு அதிகாலையில் மீள எடுக்கின்றார்கள். குறைந்தது 6 மணித்தியாலத்திற்கு மேலாகவே வலை கடலில் போடப்படுகின்றது. இவற்றில் பாம்புகள் சிக்குவதால் அவை அதிகநேரம் கடலினுள் இருக்க வேண்டி இருக்கும். அவை தமது சுவாசத்திற்காக நீரின் மேற்பரப்பிற்கு வரமுடியாததால் பெரும்பாலான பாம்புகள் இறக்கநேரிடுகின்றது. மீனவர்கள் வலைகளை கடற்கரையில் வைத்தே தவிர்த்துவதால் உயிருடன் இருக்கும பாம்புகளும் மீண்டும் கடலினுள் விடப்படும் சந்தர்ப்பமும் குறைக்கப்படுகினறது. வேறுபட்ட கண் அளவு உடைய (Mesh Size) வலைகள் மீனவர்களால் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில் பாம்புகள் பெரும் பாலும் சூடை வலை, அறக்கொட்டியான் வலை, 4inch net இலேயே பிடிபடுகின்றன. இவையே அதிகமாக பாவிக்கப்படும் வலை வகைகளும் ஆகும். மீனவர்களின் கருத்தின் படி கடலில குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்லும் போதே பாம்பு இனங்கள் அதிக எண்ணிக்கையில் பிடிபடுகின்றன. IUCN தரவுப்படி Least concern பட்டியிலேயே கடற்பாம்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றின் குடித்தொகை அளவு சரியான அளவில் தெரியாததால் கடற்பாம்புகளின் பாதுகாப்பு பற்றிய எண்ணக்கரு அவசியமான ஒன்றாகும்.

கடற்பாம்புகள் அனைத் தும் விசப்பாம்புகள் ஆகும். இவற்றின் விசம் நரம்பு மண்டலத்தை தாக்க வல்லது (Neuro Toxins). இவற்றின் விசம் தரையில் காணப்படும். பெரும் பாலான விசப்பாம்புகளின் விசத்தினை விட வீரியம் கூடியது ஆகும். இருப்பினும் இவை கடிப்பதற்கான இயல்பினை குறைவாகவே காண்பிக்கின்றன.

இதனால் கடற்பாம்புகளால் ஏற்படும் மரணம்குறைவாகவே காணப்படுகின்றது. மீனவர்கள் வலையினை தவிர்க்கும் போதோ அல்லது வலையனைவளாத்தினுள் எடுக்கும் போதோ கடிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. கடற்கரையோரங்களில் வைத்து மீன்கள் வேறாக்கப்படுவதால கடற்கரைக்கு வரும் வெளிநபர்களுக்கோ, மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கோ கடிப்பதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு. மீனவர்களின் தகவல்களின் படி மணற் காட்டு பகுதியில் சிறுமி ஒருவர் கடற்பாம்பின் கடி மூலம் இறந்ததாக கூறப்படுகின்றது. அத்துடன் கடித்தவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்படுகின்றது. கடற்பாம்புகளின் விசத்தன்மை இனத் துக்கு இனம் வேறுபடுகின்றது. உதாரணமாக H.spiralis இன் $LD_{50}$ 315mg/kg ஆகும். ஆனால் H.cyanocinctus இன் $LD_{50}$ 0.35 mg/kg ஆகும். அவுஸ்திரேலியாவில் ஒவ் வொரு பாம்பிற்கெனவும் தனித்தனியாக Antivenom தயாரித்து பயன்படுத்துகின் றார்கள். இலங்கையில் கடறபாம்புக்கடிக்கான Antivenom வைத்திய சாலை எதிலும் இல்லை என்பது ஒரு ஆபத்தான செய்தியே ஆகும். *(முற்றும்)*


**புஸ்பலிங்கம் சுரேந்தர்**
Demonstrator
**விலங்கியல் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



**நன்றி:-** கலாநிதி.அபிராமி சிவரூபன்,
திரு.கமலக்கண்ணன் இராகவன்,
செல்வி.தார்மிகா செல்வராஜா.




## வாரத்திற்கு ஒரு புதிர்! 116

2013 ஆம் ஆண்டில் பௌதீகவியலில் நோபல் பரிசு வென்றவர் யார்?

**புதிர் 116 இற்கான விடைகளை 01.09.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.


**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழகம்.


**புதிர் 115 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

**புதிர் 115 க்கான கேள்வியும் விடையும்:**

ஓசோன் மண்டலம் அழிவடைதல் தொடர்பாக முதன்முதலில் எந்த வருடத்தில் "nature" சஞ்சிகையில் அறிக்கையிடப்பட்டது?

1985

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 116

சரியான விடை:-..............................

முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ். அட்டூழியம்; அமெ.ஜனாதிபதி கண்டனம்



பெற்றோர் கண்ணீரில்

ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம்

ஐ.எஸ்.ஐ.எஸ். போராளி ஒருவரால் கழுத்து அரிந்து கொடூரமாக கொலை செய்யப்படும் அமெரிக்க நிருபர்

ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் பிடித்துள்ளனர். அவற்றை ஒன்றிணைத்து இஸ்லாமிய தேசம் என்ற புதிய நாட்டை உருவாக்கியுள்ளனர்.

அவர்கள் பிடித்து வைத்துள்ள பகுதிகளை மீட்கவும், மேற்கொண்டு தாக்குதல் ஏதும் நடக்காமல் தடுக்கும் வகையில் ஈராக்கில் அமெரிக்க விமானங்கள் வான்வெளி தாக்குல் நடத்துகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் சிரியாவில் நடைபெறும் உள்நாட்டு போர் செய்தி சேகரிக்கும் அமெரிக்க பத்திரிகை நிருபரை தலை துண்டித்து படுகொலை செய்தனர்.

இந்த நிருபரின் பெயர் ஜேம்ஸ் போலே. இவர் சிரியாவில் செய்தி சேகரித்து வந்தார். கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் இவரை காணவில்லை. இவருடன் ஸ்டீவன் ஜோயல் கோட்லாப் என்ற நிருபரும் மாயமானார்.

இந்த நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் யூடியூப மற்றும் 'அல் புர்கான் மீடியா' ஆகிய இணையத் தளங்களில் ஒரு வீடியோவை ஒளிபரப்பினர். 4 நிமிடங்கள் மட்டுமே ஓடக்கூடிய அந்த வீடியோவில் நிருபர் ஜேம்ஸ் போலேயின் தலை துண்டித்து கொலை செய்யப்படும் காட்சி இடம் பெற்றிருந்தது.

தீவிரவாதிகளின் இச்செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஒட்டு மொத்த உலகமே பத்திரிக்கையாளர் ஜேம்ஸ் போலே கொல்லப்பட்ட விதத்தை பார்த்து திகைத்து நிற்கிறது என்றார்.

கொடூரமான இச்செயலை செய்த இந்த தீவிரவாத புற்று நோயை ஒழிக்க பொதுவான முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும், அப்போதுதான் இப்படிப்பட்ட தாக்குதல்கள் பரவாமல் தடுக்க முடியும் எனவும் ஒபாமா தனது கண்டனத்தில் மேலும் தெரிவித்தார். (இ)

# ஜப்பானில் பாரிய மண்சரிவு

## குழந்தைகள் உட்பட 36 பேர் பலியாகினர்; நூற்றுக்கணக்கானோரை காணவில்லை



(டோக்கியோ)

ஜப்பானின் ஹிரோஷிமா பிராந்தியத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற பாரிய மண்சரிவில் சிக்கி குறைந்தது 36 பேர் பலியானதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர்.

ஹிரோஷிமா நகருக்கு வெளியிலுள்ள மலைப் பிராந்தியமொன்றுக்கு அருகிலுள்ள குடியிருப்புப் பிரதேசத்தில் அடை மழை காரணமாக இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது.

பலியானவர்களில் 2 வயது பாலகன் ஒருவன் உள்ளடங்குகிறான். மண் சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 53 வயது மீட்புப் பணியாளர் ஒருவர் இரண்டாவதாக ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை காலை வரையான 24 மணி நேரத்தில் ஏற்பட்ட கடும் மழை வீழ்ச்சியே இந்த மண் சரிவுக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (இ)

# சச்சின்


## சாதனை நாயகனின் சரித்திரம்




....ஒவ்வொரு இன்னிங்சிலும் 6 விக்கெட் என 126 ரன்களுக்கு 12 விக்கெட்டக்களை வீழ்த்திய ப்ரூட்ரீட், போட்டியில் இந்தியா தோல்வியடைவதற்கு முக்கிய காரணியாகத் திகழ்ந்தார். சச்சின் முதல் இன்னிங்சில் 1 ரன் எடுத்தான். இரண்டாவது இன்னிங்சில் 40 ரன்கள் எடுத்தும் பயனின்றி இந்தியா தோல்வியைத் தழுவியது. எனவே, மூன்றாவது மற்றும் இறுதி ஆட்டத்தில் இந்தியா ஜெயித்தாலும் தோற்றாலும் தொடர் வெற்றி ஆஸ்திரேலியாவுக்குத்தான். 2 ஜனவரி 1992 ஆம் ஆண்டு சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் மூன்றாவது போட்டி துவங்கியது. காரணம் இந்த ஆடுகளம் ஒன்றுதான் சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமானது. வேகப் பந்து வீச்சாளர்களுக்குக் கைகொடுக்காதது. ஆகவே, சிட்னியில் வெங்கடபதி ராஜு மற்றும் ஹிர்வானி ஆகிய ஸ்பின்னர்களை சேர்த்துக் கொள்ளாமல் இந்தியா களம் இறங்கிய காரணம் தெரியாமல் ஆஸ்திரேலியர்களே குழம்பினார்கள். ஆஸ்திரேலியாவின் டேவிட் பூன் 129 ரன்கள் எடுத்தார். ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 313. அடுத்து இந்தியா ஆடக் களம் இறங்கியது. சித்து பூஜ்யத்தில் ஆட்டம் இழந்தார். மஞ்சுரேகர் 25 மற்றும் வெங்சர்கார் ஆகியோர் ஓரளவு ரன்களைச் சேர்த்தனர். இருவரும் ஆட்டம் இழக்க அசாருதீன் ஆட வந்தார். ஆனால், அவரும் விரைவில் அவுட் ஆனார். இப்போது புகழின் உச்சியில் இருக்கும் ஷான் வார்னேவிற்கு அதுதான் முதல் டெஸ்ட். தனது முதல் போட்டியிலேயே வார்னே தனது சுழற்பந்து வீச்சின் திறமையை பறைசாற்றிக் கொண்டிருந்தார்.

ரவிசாஸ்திரியுடன் இணைந்து ஆட பின்னர் சச்சின் வந்தான். இருவரும் ஐந்தாவது விக்கெட் ஜோடியாக 196 ரன்களைச் சேர்த்தனர். ரவிசாஸ்திரியின் ஆட்ட வேகம் பற்றி சொல்லவே வேண்டாம். அந்த அளவிற்கு அசாத்திய பொறுமை, நிதானம் எல்லாம் அவர் ஆட்டத்தில் இருக்கும். ரன்னும் அடிக்காமல் அவுட்டும் ஆகாமல் எதிராளியை மண்டை காய வைப்பதில் ரவிசாஸ்திரி கில்லாடி. இருப்பினும் சாஸ்திரியின் நிதானம் இப்போது தேவைப்பட்டது. இந்தமுறை 10 மணி நேரம் மெதுவாக ஆடினார் அவர். ரன்களையும் சேர்த்துக் கொண்டிருந்தார். இந்தப் போட்டியில் ரவிசாஸ்திரி ஒரு சாதனை செய்தார். ஆம், இரட்டை சதம் அடித்து ஆஸ்திரேலிய மண்ணில் டபுள் செஞ்சுரி அடித்த முதல் இந்தியன் என்ற பெருமையைத் தட்டிச் சென்றார். அத்துடன் நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தியதால் ஆட்ட நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டார்.

### இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன்



சாஸ்திரி அவுட் ஆக சச்சினுடன் பிரபாகர். நானகாவது நாள் சச்சினுடையது என்று சொல்லும் வகையில் அன்றைய நாள் முழுவதையும் சச்சின் ஆக்கிரமித்துக் கொண்டான். ஒவ்வொரு பந்தையும் அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தான் அவன். வழக்கமாக பேட்டிங் செய்வோர்தான் மழை வருவது போல் உள்ளது. வானம் மூடியிருப்பதால் வெளிச்சம் இல்லை. பந்து வரும் திசை தெரியவில்லை என்று கூறுவார்கள். அது நியாயமாகவும் பட்டால் ஆட்டம் நிறுத்தப்பட்டு அடுத்த நாள் தொடரும். ஆனால், வித்தியாசமாக ஆஸ்திரேலிய வீரர்கள் வெளிச்சம் போதவில்லை என்று அம்பயரிடம் முறையிட்டார்கள். ஆனால், சச்சினோ விடாப்பிடியாக எனக்குப் பந்து வருவது தெரிகிறது. இந்த வெளிச்சம் போதும்.

என்னால் ஆட முடியும் என்று வாதிட்டான். பேட்ஸ்மென் ஆட ஒப்புக் கொள்ளும்போது போட்டியை நிறுத்த யாருக்கும் உரிமை இல்லை. எனவே, ஆஸ்திரேலிய பௌலர்கள் நொந்து கொண்டே பந்து வீசினர். பிரபாகர், கபில்தேவ் ஆகியோர் அவுட் ஆயினர். 226 நிமிடங்கள் 171 பந்துகளில் சச்சின் தனது அடுத்த செஞ்சுரியை ஆஸ்திரேலியாவில் பதிவு செய்தான். இந்த மண்ணிலும் சச்சின் ஒரு சாதனை செய்தான்.

ஆஸ்திரேலிய வீரர்கள், பத்திரிகைகள் அனைவரும் சச்சினைப் பாராட்டித் தள்ளினர். ஆஸ்திரேலிய முன்னாள் பேட்ஸ்மென் ஓ நீல் இது வயதை மீறிய திறமை, இவனது ஸ்ட்ரோக்குகள் அனைத்து சர்வதேச ரகத்தில் இருக்கிறது. புதியவன் போன்று தெரியவே இல்லை என்றார். ஆஸ்திரேலிய கேப்டன் பார்டரோ, 19 வயதிலும் இவன் இந்தப் போடு போட்டால் 25 வயதில் என்ன செய்வானோ என்பதை நினைத்தால் உதறலாக இருக்கிறது என்றார். ஆஸ்திரேலிய வானொலி வர்னனையாளர் டிம்லேன் ஒருபடி மேல் சென்று இவன் சொர்க்கத்தில் இருந்து வந்தவன், இவன் எது வேண்டுமானாலும் செய்வான் என்றார்!

கே.ரமேஷ்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# மேற்குலக ஏகாதிபத்யங்களின் இரட்டைவேடம்!

பாலஸ்தீனத்தின்மீது கடந்த ஒருமாத காலமாக இஸ்ரேலிய இனவெறி பயங்கரவாத அரசு அப்பட்டமான ஆக்கிரமிப்புப் போரை நடத்திக் கொண்டிருக்கிறது. கடந்த ஜூலை முதல் வாரத்திலிருந்து நடந்துவரும் இப்போரில் இதுவரை ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட பாலஸ்தீனிய மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

காசா பிராந்தியத்தின் தெருக்கள் எங்கும் ரத்த ஆறு ஓடுகிறது. ஆயிரத்துக்கும் மேலான தடவைகளில் தொன் கணக்கில் இரசாயணக் கொத்துக் குண்டுகளைக் கொண்டு வான் தாக்குதலை நடத்தி மசூதிகள், குடியிருப்புகள், மருத்துவமனைகள் அனைத்தின் மீதும் பயங்கரவாதத் தாக்குதலை இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கிறது.

இடிபாடுகளின் நடுவே வெள்ளைக் கொடி ஏந்தி நின்ற ஒரு பாலஸ்தீன குடும்பத்தினர் மீதும், ஐ.நா. மன்றம் ஏற்படுத்தியுள்ள பால்ஸ்தீன அகதிகள் முகாம் மீதும், தொடக்கப்பள்ளியில் தஞ்சமடைந்த மூவாயிரத்துக்கும் அதிகமானோர் மீதும் காட்டுமிராண்டித்தனமாக வான் தாக்குதலையும் பீரங்கித் தாக்குதலையும் நடத்தி மனித உணர்வற்ற மிகக் கொடிய காட்டுமிராண்டிகள் தாங்கள்தான் என்பதை இஸ்ரேலிய இனவெறி பாசிச பயங்கரவாதிகள் உலகுக்கு அறிவித்து வருகின்றனர்.

பாலஸ்தீனத்தின் மேலைக் கரை பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஜூன் மாதத்தில் மூன்று இஸ்ரேலிய இளைஞர்களைக் கடத்திச் சென்று கொன்றதற்குப் பதிலடிதான் இத்தாக்குதல் என்று இஸ்ரேல் நியாயவாதம் பேசுகிறது.

ஆனால் ஹமாஸ் அல்லது இதர பாலஸ்தீன அமைப்புகளோ தாங்கள் இக்கொடுஞ்செயலில் ஈடுபடவில்லை என்றே மறுத்து வருகின்றனர். இருப்பினும், மூன்று இஸ்ரேலியர்களைக் கொன்றுவிட்டார்கள் என்ற நொண்டிச் சாக்கை வைத்து ஹமாஸ் இயக்கத்தை ஒழித்துக் கட்டும் நோக்குடன் இப்போரை நடத்தி வருகிறது, இஸ்ரேல்.

காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரும் மேற்குக் கரை பகுதியில் ஃபதா அமைப்பினரும் பிரிந்து பாலஸ்தீன சுயாட்சி நிர்வாகத்தை நடத்திவந்த நிலையில், ஒட்டுமொத்த பாலஸ்தீனர்களுக்கும் ஐக்கியப்பட்ட சுயாட்சி நிர்வாகத்தை உருவாக்குவதெனத் தீர்மானித்து, கடந்த ஏழாண்டுகளாகப் பிளவுபட்டிருந்த பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பினரும், ஃபதா அமைப்பும் ஒன்றிணைவது என்று கடந்த 2014 ஏப்ரலில் முடிவு செய்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இன்னும் ஆறு மாதங்களில் பாலஸ்தீன சுயாட்சிப் பகுதிகளில் புதிய தேர்தல் நடத்தவும் இவ்விரு அமைப்புகளும் தீர்மானித்தன. ஆனால், பாலஸ்தீன சுயாட்சிப் பகுதியில் பாலஸ்தீன அமைப்புகளிடையே ஒற்றுமை நிலவக் கூடாது என்பதே அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் திட்டமாக உள்ளது.

பிரித்தாளும் சூழ்ச்சியுடன், பெயரளவிலான இந்த சுயாட்சி உரிமையைக்கூட, செயல்படுத்த விடாமல் இதுவரை அவை தடுத்து வந்தன. இதனாலேயே தற்காலிகமாக ஒரு ஒற்றுமைக்கு வந்து ஹமாஸ் அமைப்பும் ஃபதா அமைப்பும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மறுநாளே (ஏப்ரல் 24) காசா பிராந்தியத்தில் திடீர் வான்வழித் தாக்குதலை நடத்தி இஸ்ரேல் எச்சரித்தது.

அதன் தொடர்ச்சியாகவே கடந்த ஜூலை 8 ஆம் திகதியிலிருந்து மிகக் கொடிய இனப்படுகொலைப் போரை இஸ்ரேல் நடத்தி வருகிறது. அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் இந்த போர்த்தாக்குதலுக்கு ஆதரவாகவே நிற்கின்றன.

குடிநீர், மருத்துவம், மின்சாரம, எரிவாயு, வேலை வாய்ப்பு, வர்த்தகம் முதலான அனைத்துக்கும் முற்றாக இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களையே சார்ந்திருக்க வேண்டிய நிலையில் காசா பிராந்தியம் இருத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கே மத்தியதரைக்கடலும், இதர அனைத்து திசைகளிலும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகளும், தெற்கே இஸ்ரேலுக்கு அனுசரணையாக உள்ள எகிப்து நாடும், என எந்த வழியிலும் ஆதரவற்ற சூழலில்தான் பாலஸ்தீனர்கள் உள்ளனர். காசா பிராந்தியத்துக்குள்ளேயேதான் பாலஸ்தீனர்கள் தமது பிழைப்பையும் இதர அத்தியாவசியத் தேவைகளையும் தேடிக் கொள்ள வேண்டும் எனுமளவுக்கு, திறந்த வெளி சிறைச்சாலையாகவே இப்பகுதி உள்ளது.

போதாக்குறைக்கு காசா பிராந்தியத்தைச் சுற்றி ஒரு சுற்றுச் சுவரையும் இஸ்ரேலிய இனவெறி அரசு அரசு எழுப்பியுள்ளதால், பாலஸ்தீனர்கள் பிழைப்புக்காகக்கூட அச்சுவரைத் தாண்டி அனுமதியின்றிச் செல்ல முடியாது. இதனால் பாலஸ்தீனர்கள் சுரங்கங்களை அமைத்து இஸ்ரேலியப் பகுதிகளுக்குச் சென்று பிழைப்பைத் தேடுவதும், அதே போல எகிப்து நாட்டுக்கு சுரங்க வழியாகச் சென்று கூலிக்கு உழைத்து அத்தியாவசியப் பொருட்களைச் சேகரித்து வருவதும் நீண்ட காலமாக நடந்து வருகிறது.

இதைத்தான் பாலஸ்தீனர்கள் வீடுகளுக்குள்ளேயே சுரங்கம் அமைத்து வெடிகுண்டுத் தாக்குதல் தொடுப்பதாகவும் அவற்றைத் தகர்ப்பதற்காக வீடுகள் மீது தாக்குதலை நடத்த வேண்டியிருப்பதாகவும் நியாயப்படுத்துகிறது இஸ்ரேல.

இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக ஹமாஸ் இயக்கத்தினர் தற்போது நடத்திய தற்காப்புத் தாக்குதலில் இதுவரை 4 இஸ்ரேலிய சிவிலியன்கள்தான் கொல்லப்பட்டுள்ளனர். இதை இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் நடத்தும் பயங்கரவாதப் போர் என்று இஸ்ரேலும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் சித்தரிப்பதை யாரானும் நம்ப முடியுமா?

இஸ்ரேலின் இனவெறி ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து வாய் திறக்காத அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்யங்கள், கடந்த ஜூலை 17 ஆம் திகதியன்று உக்ரைனில் மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டு அதில் பயணித்த 283 பயணிகள் கொல்லப்பட்டதும் ஆவேசத்துடன் அக்கொடுஞ் செயலுக்கு எதிராகக் கண்டனத்தைத் தெரிவித்தன.

விமானம் விழுந்து நொறுங்கிய இடமான டொனெட்ஸ் பிராந்தியத்தில் ரஷ்யர்களே அதிகமாக இருப்பதாலும், இவர்கள் உக்ரைனிலிருந்து பிரிந்து ரஷ்யாவுடன் இணையும்நோக்கத்துடன் போராடி வருவதாலும், இவர்களுக்கு ரஷ்ய அரசு ஆதரவளிப்பதாலும் இந்த விமானத்தை ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிக்காரர்கள்தான் சுட்டு வீழ்த்தியுள்ளார்கள் என்று அமெரிக்கா உடனடியாகக் குற்றம் சாட்டியது.

அமெரிக்கா சொன்னால் அதற்கு அப்பீல் ஏது? அதைத் தொடர்ந்து ரஷ்ய வல்லரசானது மனித குலத்துக்கு எதிரான கொடிய குற்றங்களில் ஈடுபடுவதாக அமெரிக்க விசுவாச மேலை ஏகாதிபத்தியங்களும் குற்றம் சாட்டின. "இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்துவதற்கான ஆயுதங்களை கிழக்கு உக்ரேனிய கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யாதான் வழங்கியுள்ளது" என்று சாடினார், அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜான் கெர்ரி.

"தண்டனை ஏதுமின்றி குற்றங்களில் ஈடுபடும் ரஷ்யா" என்று தலைப்பிட்டு, அமெரிக்காவின் பிரபல வார ஏடான 'டைம்' பரபரப்பாகக் குற்றம் சாட்டியது. ரஷ்யா இதனை மறுத்து, முழுமையான விசாரணைக்கு முன்வந்த போதிலும், ஆதாரமின்றிக் குற்றம் சாட்டுவதை சீனா கண்டித்த போதிலும் கோயபலஸ் பாணியில் ஏகாதிபத்தியவாதிகள் தொடர்ந்து ரஷ்யா மீது குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்த விமானத்தை கிழக்கு உக்ரேனிய கிளர்ச்சியாளர்கள்தான் சுட்டுவீழ்த்தினார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை. குற்றம்சாட்டப்படும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களும் விழுந்து நொறுங்கிக் கிடந்த விமானத்திலிருந்து கருப்புப் பெட்டியை (விமானிக்கும் கட்டுப்பாட்டு அறைக்குமிடையிலான தகவல்களைப் பதிவு செய்யும் கருவியை) மீட்டெடுத்து விசாரணைக் குழுவிடம் ஒப்படைத்துள்ளனர்.

தாங்கள் விரும்புகிற திசையில் இந்த விசாரணை அமைய வேண்டுமென்ப தற்காகவே விபத்து நடந்த உக்ரைனில் அல்லாமல் பிரிட்டனுக்கு இந்தக் கருப்புப் பெட்டி அனுப்பப்பட்டது. உக்ரைனில் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட விவகாரத்தில் சர்வதேச விசாரணை நடத்தக் கோரும் தீர்மானம் ஐ.நா.வில் உடனடியாக நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கு ராணுவக் கருவிகள் மற்றும் உயர்தொழில்நுட்பச் சாதனங்கள் ஏற்றுமதி செய்வதற்கும், ஐரோப்பிய நிதிச் சந்தைகளை ரஷ்ய வங்கிகள் தொடர்பு கொள்வதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளது.

ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று தொழில வளர்ச்சியடைந்த பெரும் பணக்கார நாடுகளின் கூட்டமைப்பு எச்சரிக்கிறது......... தொடரும்

*இணையம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை பலத்தை புலிகள் ஒழித்துவிட்டனர்

## சம்பிக்க கவலை



தமிழீழவிடுதலைப் புலிகள் இலங்கையில் சிங்களவர்களின் பெரும்பான்மை ஆதிக்கத்தை அழித்து விட்டதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க கவலை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்துக்கு முன்னர் இலங்கையில் சிங்களவர்களின் பெரும்பான்மை பரம்பல் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி காணப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகள் ஏராளமான சிங்களவர்களை அழித்துவிட்டார்கள்.

இதன் காரணமாக சிங்களவர்களின் எண்ணிக்கையில் சடுதியான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது.

தற்போது முஸ்லிம், கிறிஸ்தவ அடிப்படைவாத அமைப்புகள் விடுதலைப் புலிகள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள். சிங்களவர்களின் பெரும்பான்மை எண்ணிக்கையை சிறிது சிறிதாக அழித்து வருகின்றார்கள்.

இதே நிலை நீடித்தால் இன்னும் சிறிது காலத்திற்குள் இலங்கையில் சிங்களவர்கள் பெரும்பான்மை பலத்தை இழந்து விடுவார்கள். வேறு இனத்தவர்களின் சனத்தொகை சிங்களவர்களை விட அதிகரித்துவிடும்.

இந்த நூற்றாண்டுடன் சிங்களவர்களின் பெரும்பான்மை எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுவிடும். அதன் பின் சிங்களவர்கள் அடுத்தவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்க நேரிடும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ளார். (இ)

# நாடாளுமன்றில் வெற்று நாற்காலிகளே உள்ளன

## லக்ஸ்மன் கிரியெல்ல ஆதங்கம்

(கொழும்பு)

நாடாளுமன்றில் வெற்று நாற்காலிகளுடனேயே பேச வேண்டியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் பேசிவிட்டு நாடாளுமன்றை விட்டு சென்று விடுவதால், அவர்கள் அமர்ந்திருந்த நாற்காலிகளுடனேயே பேச வேண்டியுள்ளது.

பிர்தமரும் இல்லை, நீதி அமைச்சரும் இல்லை.

அமைச்சர்கள் உரையாற்றியதும் நாடாளுமன்றை விட்டு வெளியேறிச் செல்கின்றனர்.

இதனால் ஓர் கேள்வியை எழுப்பி அதற்கான பதிலைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இதுவா நாடாளுமன்ற சம்பிரதாயம் என்பதனை கேட்க விரும்புகின்றேன்.

சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்றுக்கொள்வதற்கான உச்ச வயதெல்லை நிர்ணயிக்கப்பட உள்ளதாக அறிந்தேன்.

30 வயதுக்கும் மேற்பட்டவர்கள் சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்றுக்கொள்ள முடியாது என சட்டம் கொண்டு வரப்பட உள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் 30 வயதின் பின்னரே சட்டக்கல்லூரியில் சேர்ந்து சட்டப் படிப்பை தொடர்ந்தார் என லக்ஸ்மன கிரியெல்ல தெரிவித்துள்ளார். (இ)

# விரிவான விசாரணை கோரிக்கை தொடர்பான விசாரணை ஆரம்பம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

கட்சியின் அனுமதியின்றியே வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஐ.நாவிடம் விரிவான விசாரணைகளை கோரியுள்ளனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கோரியதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் விசாரணைகளை விரிவுபடுத்துமாறு கோரிக்கை விடுக்க கட்சி மாகாணசபை உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான விசாரணைகளை விரிவுபடுத்துமாறு 33 வடக்கு, கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் எழுத்து மூலம் கோரியிருந்தனர்.

இந்த கோரிக்கை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்களின் நடவடிக்கைகள் குறித்து கட்சித் தலைமைக்கு எதுவும் தெரியாது என அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், எம்.கே. சிவாஜிலிங்கம், பி.சத்தியலிங்கம், த. குருகுலராஜா உள்ளிட்ட 33 உறுப்பினர்கள் இந்த கோரிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர் என கொழும்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்ய நவீனமுறை

இலத்திரனியல் முறையில் வழக்குத் தாக்கல் செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்திற்கு முன்னதாக இந்த புதிய முறைமையை அறிமுகம் செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

சிவில் வழக்குகளில் காணப்படும் சிக்கல் மிகுந்த தன்மையே வழக்கு விசாரணைகள் தாமதமடையக் காரணமாகும்.

சிவில் வழக்கு விசாரணை தொடர்பில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம்.

இலத்திரனியல் முறையில் வழக்கு விசாரணை செய்யுமாறு பிரதம நீதியரசரும் கோரியிருந்தார்.

முதல் கட்டமாக அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் இலத்திரனியல் முறையில் மனுக்களைத் தாக்கல் செய்ய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இணையத்தின் ஊடாக மனுக்களை தாக்கல் செய்ய முடியும்.

முதல் கட்டமாக மாத்தறை உயர் நீதிமன்றில் இலத்திரனியல் முறையில் மனுக்களை தாக்கல் செய்யும் முறைமை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இதற்காக ருஹுணு பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என அமைச்சர் ஹக்கீம் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## நல்லவராவது எப்படி

"நீ எப்படி நினைக்கிறாயோ அப்படியே ஆகின்றாய்" என்று பெரியவர்கள் சொல்வதுண்டு.

அது போலவே நாம் எப்படிப் பேசுகிறோமோ அப்படியே ஆகிறோம் என்பதிலும் உண்மையிருக்கிறது.

நாம் எப்படித் தோன்றுகின்றோமோ அப்படியே ஆகிறோம் என்பதிலும் உண்மையிருக்கிறது.

அசோக வனத்தில் சீதையை சிறை வைத்திருந்தான் இராவணன்.

"எவ்வளவோ முயற்சிகள் செய்தும் சீதையின் கவனம் தன்பக்கம் திரும்பவில்லையே" என்று கவலைப் பட்டான்.

"சீதை என்மேல் ஆசைப்படவேண்டும். அதற்கு என்ன வழி" என்று யோசித்தான்.

அமைச்சர்களிடமெல்லாம் ஆலோசனை கேட்டான். ஓர் அமைச்சர் சொன்னார்.

"உன்னைப் பார்த்து சீதை ஆசைப்படவேண்டும் என்றால் அதற்கு ஒரே வழிதான் எனக்குத் தோன்றுகிறது. அதாவது நீ இராமன் மாதிரி வேடம் போட்டுக் கொள்" அதன்பின் சீதையின் முன்னால் போய் நில். ஒருவேளை அதைப்பார்த்து அவள் உன்மீது ஆசைப்படலாம் என்றார்.

இராவணன் யோசித்தான். இந்த யோசனை சரியென்றேபட்டது.

உடனே இராமன் போன்று ஒப்பனை செய்து கொண்டான். ஆடை, அணிகலன் எல்லாம் அணிந்து கொண்டு சீதையைச் சந்திக்கப் புறப்பட்டான்.

அதற்கு முன் ஒருதரம் கண்ணாடியின் முன்னால் நின்று ஒப்பனையை சரிபார்த்து கொள்ள விரும்பினான்.

போய் கண்ணாடியின் முன்னால் நின்றான்.

அசல் இராமனைப் போலவே அவனதுவேடம் தோன்றியது. கொஞ்சநேரம் அதையே உற்றுப்பார்த்தான். இப்பொழுது அவனுடைய மனம் மாறிவிடுகிறது. இன்னொருவன் மனைவி மீது ஆசை கொள்ளாதே என்று சொல்கிறது.

இராமனாக வேடம் போட்டால் கூட பிறர் மனைவியை நோக்காத அந்தக் குணம் வந்துவிடுகிறது. இது பற்றிப் பிரசங்கம் ஒன்றில் ஒரு பெரியவர் சொல்லக் கேட்ட கதை.

என் கதையும் இப்படித்தான். நல்ல விடயங்களையே சொல்லவேண்டிய அலுவலகக் கடமை எனக்கு இருந்தது.

அது என்னையும் நல்லவன் என்று மற்றவர்களை நம்ப வைத்திருக்கிறது. அதனாலேயே நல்லவனாக மாறிக் கொண்டிருப்பதை ஓரளவுக்கு உணரமுடிகிறது.

ஒருநாள் ஒருதாய் தன்னுடைய மகளை அழைத்துக் கொண்டு நான் வேலை செய்யும் அலுவலகத்திற்கு வந்தார்.

வாசலில் இருந்தவர்களிடம் இன்று ஒரு தகவல் சொல்பவரை பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் என்னிடம் அழைத்து வந்தார்கள்.

"என்னம்மா விடயம்?" என்று விசாரித்தேன்.

"வேற ஒன்றுமில்லை ஐயா... உங்களுடைய கையால் என் பொண்ணு நெற்றியில் வீபூதி பூசி விட்டு சீக்கிரம் கல்யாணம் நடக்க வேண்டுமென்று அவளை ஆசீர்வாதம் பண்ணவேண்டும்" என்றார்.

எனக்கு தூக்கிவாரிப்போட்டது.

"அம்மா... நான் ஆசீர்வாதம் பண்ணக்கூடிய அளவுக்கு அப்படி ஒன்றும்..."

"அதெல்லாம் உங்களுக்கு தெரியாது. உங்களைப்பற்றி எங்களுக்குத் தெரியும். இதோ கையோடு வீபூதி கொண்டு வந்திருக்கிறேன். பூசிவிடுங்க, ஆசீர்வாதம் பண்ணுங்க" என்றார்.

நான் வேறுவழியில்லாமல் அவர்களின் திருப்திக்காக அவர்கள் சொன்னது போலவே செய்தேன். அவர்கள் மனநிறைவோடு திரும்பிப் போனார்கள். அவர்கள் போனபின் நான் யோசித்துப் பார்த்தேன்.

"தினமும் ஐந்து நிமிடம் நல்ல விடயாங்களைச் சொல்வதற்கே நமக்கு இந்தளவுக்கு மரியாதை கிடைக்கிறதே, நாம் நிஜமாகவே நல்லவனாக மாறிவிட்டால்..."

நான் அன்று தொடக்கம் அந்த முயற்சியில் இறங்கினேன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தின் குடிநீர் தேவைக்கு 36 குழாய்க் கிணறுகள்

## 15 குழாய்க் கிணறுகள் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன

**(மல்லாவி)**

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் குடிநீர் தேவையை பூர்த்திசெய்வதற்காக 36 குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பணிப்பாளர் அருணாசலம் விஜய கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் கடும் வரட்சியினால் மக்கள் குடிநீர் பெறுவதற்கு அலைந்து திரிகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டே மேற்படி குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

என்றுமில்லாதவாறு இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சி தாண்டவமாடுகின்றது.

இதனால் மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் வரண்டுபோயுள்ளன.

அத்தோடு மக்களின் சொந்த குடிநீர் கிணறுகளும் வற்றிப்போய் உள்ளன.

மக்களும் கால்நடைகளும் குடிநீர்க்காக அலைந்து திரியும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் குடிநீருக்குப் பொறுப்பான இலங்கை நீர்வளச் சபையின் ஒத்துழைப்புடன் தலா நான்கு இலட்சம் ரூபா செலவில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஒன்பதும் பூநகரி பிர்தேச செயலக பிரிவில் 18 உம் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் ஒன்பதுமாக மொத்தம் 36 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஏழு, கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் எட்டுமாக மொத்தம் 15 குழாய்க் கிணறுகள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

இக் குழாய் கிணறுகளின் விசேட சிறப்பு அம்சமாக மக்கள் பாவனையின் போது சிந்தி வெளியேறும் நீரானது குழாய்க் கிணறுகளின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள சிறுதொட்டியில் சேமிக்கப்பட்டு அவை கால்நடைகளின் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தும் முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)

## மஹோற்சவம்

கிளிநொச்சி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

திருவிழா காலங்களில் நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி உலாவரும் காட்சி இடம்பெறும்.


அன்றையதினம் இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி வெளிவீதி வலம் வருவார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கிளிநொச்சிக் குளத்தின் தீர்த்தக் கரையில் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (2-254)




# திருத்த வேலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி சிறந்த முறையில் கையாளப்படுவதில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் இருந்து உருத்திரபுரம் செல்லும் பிரதான வீதியை ஊடறுத்து நான்கு நீர்வழிப்பாதை (கோஸ்வேய்கள்) அமைக்கப்பட்டுள் ளன.

இரணைமடுக்குளத்தின் மூலம் நீர்ப்பாசனம் வழுங்கும் வாய்க்காலுக்கு அண்மையிலேயே உருத்திரபுரம் பிரதான வீதி அமைந்துள்ளது.

குறித்த வீதியின் பத்து கிலோ மீற்றர் பகுதியினுள்ளேயே கிளி/ இந்துக் கல்லூரிக்கு அருகிலும் டி-8 கன்னியாஸ்திரிகள் மடத்திற்கு அண்மையிலும் உருத்திரபுரம் மேற்கு எள்ளுக்காடு பகுதிக்கு அண்மித்தும் டி-9 வாய்க்காலுக்கு அருகிலும் இந்த பிரதான மாரிகாலத்தில் நீர் வழிந்தோட வசதியாக நீர் வழிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

உருத்திரம் வீதி ஓரளவு செப்பனிப்பட்டாலும் குறித்த நான்கு நீர் வழிப்பாதை மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பில் வாய்க்கால் உள்ளபோதிலும் இவ்வீதியின் பொறுப்புவீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கே உரியதாகும். தற்போது இத்திணைக்களத்தினால் டி-9 இற்கு அருகாமையில் உள்ள நீர் வழிப்பாதை பக்கங்கள் ஒழுங்குபடுத்தப்படாமல் கொங்கிறீட் போடப்பட்டுள்ளது.

உருத்திரபுரம் மேற்கு எள்ளுக்காடு பகுதி நீர் வழிபாதை குழிகளுக்கு மட்டும் சிறிதளவு சீமெந்து போடப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை எனவும் இதற்கான வேலை சிறந்த முறையில்செய்யப்படவில்லைஎனவும் இவ் வீதியைபயன்படுத்தும்பொது மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்று நன்கு திட்டமிடப்படாத அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள் அரைகுறையாக நடைபெறுவதற்கு பொறுப்பானவர்கள் யார் எனவும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறும்போது இங்குள்ள உள்ளூர் அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் சங்கத்தினர் பராமுகமாக இருப்பது ஏன் எனவும் பொது மக்களால் கேள்வி எழுப்பப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்படும் அபிவிருத்திக்கான வீதி மற்றும் வேலைத்திட்டங்களை நல்ல முறையில் செயற்படுத்த வேண்டுமென மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (2-254)



வடமாகாண சர்வோதய இயக்கத்தின் நிதி அனுசரணையில் நடத்தப்பட்ட சர்வ தேச தாய்ப்பாலூட்டும் வார நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப்பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த குடும்ப நல மருத்துவ மாதுக்கள் தாய்ப்பாலூட்டலின் முக்கியத் துவம் பற்றி விளக்கி கூறினார்கள். இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (படம் :- சிவநகா செய்தியாளர்)

# ஸ்கந்தபுர பிரதான வீதியை செப்பனிட்டு தருமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஸ்கந்தபுர பிரதான வீதியானது புதுமுறிப்புக் குளம் வரை புனரமைப்பு செய்யப்பட்டு, மிகுதி 10 கிலோமீற்றருக்கு மேற்பட்ட வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்பணிகள் எதுவும் இன்றுவரை இடம்பெறாது காண ப்படுவதாக அவ் வீதியூடாகப் பயணிப்போர் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியானது புதுமுறிப்பு, காந்திக் கிராமம், ஊற்றுப்புலம், கோணாவில், யூனியன் குளம், ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியாகும். திருத்தப்படாத இவ் வீதியில் கோணாவில் அ.த.க. பாடசாலை அமைந்துள்ளது.

தினமும் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் தமது அன்றாட கடமைகளைப் பூர்த்தி செய்வோர் அனைவரும் இப் பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

வீதி சீரின்மை காரணமாக விபத்துக்கள் அடிக்கடி இடம்பெற்று உயிரிழப்புக்களும் இடம்பெறுகிறது.

அத்துடன் இரவுவேளைகளில் வீதி விளக்குகள் பொருத்தப்படா மையால் பயணிப்போர் வீதிகளில் காணப்படும் குழிகளில் விழுந்து எழும்புவதாக தெரிவிக்கின்றனர்.

வாகனங்கள் பயணிக்கும்போது புளுதி கிளம்புவதால் சுவாசம் தொடர்பான நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

பாரிய குழிகள் வீதியின் நடுப் பகுதியில் காணப்படுவதால் மழைக் காலங்களில் வெள்ளநீர் அவற்றினுள் தேங்கி நின்று அதனூடாக பயணிக்கும் வாகனங்களினால் பாதசாரிகளின் உடைகளின் மேல் அழுக்கடைந்த நீர் தெளிக்கப்படுகிறது.

இதனால் பாடசாலைகளுக்கு சீருடை அணிந்து செல்லும் மாணவர்கள் அவலநிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

எனவே மழைகாலம் அண்மித்து வருவதால் குறித்த வீதியை தாமதமின்றி செப்பனிட்டு சீரான வீதியாக மாற்றி அமைத்துத் தருமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த வீதி அமைந்துள்ள பிரதேசம் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-271)

# சந்தைக்குள் சவாரி செய்யும் வாகனங்களை கட்டுப்படுத்துக

## சம்பந்தப்பட்டவர்களுக்கு வர்த்தகர்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிபொதுச்சந்தைக்கு மரக்கறி வகைகள், வாழைக்குலைகள், தேங்காய் ஆகியவை கொள்வனவு செய்யப் படுகின்ற வளாகப் பாதையில் வாகனங்கள் வேகமாக வருவதாக வர்த்தகர்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. இச் சந்தை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்டதாகும்.

கடந்த 17 ஆம் திகதி காலை 7 மணியளவில் பாண் ஏற்றிக்கொண்டு வேகக் கட்டுப்பாட்டை மீறி நுழைந்த வாகனம் சந்தையில் குப்பைகளை ஏற்றும் வண்டியுடன் மோதுண்டது.

இதனால் பாரிய விளைவுகள் ஏற்படாவினும் இதன்போது வாகனத்தில் பயணித்தவர் அங்கு நின்ற சுகாதார பணியாளர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதில் கைகலப்பு ஏற்பட வாய்ப்பும் ஏற்பட்டது.


இச் சந்தையின் குறித்த பாதையூடாக் பொருட்கள் கொண்டு வருபவர்கள், கொள்வனவாளர்கள், சந்தையினுள் புத்தகக்கடைகளுக்கு பிரவேசிக்கும் மாணவர்கள், பாரங்களை முதுகில் சுமந்துசெல்பவர்கள் உட்பட பலதரப்பினர் இவ்வாகன போக்குவரத்தால் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் இவ்வீதியில் வாகனங்கள் வேகமாக வருவதை கட்டுப்படுத்த வீதிக்கு குறுக்காக தடைகள் ஏற்படுத்தி வாகன வேகத்தை குறைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவ வேண்டுமென வர்த்தகர்களால் கோரிக்கை விடப்படுகிறது. (2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப் பொறிமுறையூடாகவே நிரந்தரத்தீர்வு காணப்படவேண்டும்

## பேரா.குணரட்ன வலியுறுத்தல்



இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம் அன்றைய காலகட்டத்துக்கு மட்டுமே பொருந்தும். அது அந்தக் காலத்துடன் முடிந்துவிட்டது. நாம் எமக்குத் தேவையான உள்நாட்டுப் பொறிமுறையினூடாக நிரந்தரத் தீர்வுகாண வேண்டும்.

வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம். பழ.நெடுமாறன் தலைமையிலான உலகத் தமிழர் பேரமைப்பு, சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, தொல்.திருமாவளவன தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியன தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள் அல்ல. அவை சமூக அமைப்புகள். எனவே, அவை குறித்து நாம் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு சர்வதேச தீவிரவாதம் தொடர்பான நிபுணரும் பேராசிரியருமான ரொஹான் குணரட்ன தெரிவித்தாா.

மோடியின் தலைமைத்துவத்தின்கீழ் இலங்கை - இந் திய உறவு என்ற தலைப்பில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், மேலும் தெரிவிததவை வருமாறு,

அரசியலுக்குள் இனம், மதங் களை உட்புகுத்துவதும் சிங்கள, தமிழ்த் தேசியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதும் நாட்டை அழிவுப்பாதைக்கே இட்டுச்செல்லும. வட இந்தியாவுடன் உறவுகளைப் பலப்படுத்துவதுபோல தென்னிந்தியாவுடனான உறவையும் இலங்கை அரசு பலப்படுத்த வேண்டும்.

இலங்கை - இந்திய உறவில் தமிழகத்தின் பங்கு முக்கியமானது. இலங்கை - இந்திய உறவு வரலாற்றுக் காலம் முதல் இன்று வரை தொடர்கிறது. ராஜீவ்காந்திக்குப் பன்னர் இந்தியாவின் சிறந்ததொரு தலைவராக மோடி உருவாகயுள்ளார். அரசியல், பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அப்பாற்சென்று பொருளாதாரம் குறித்தும் தனது மூன்றாவது கண்ணூடாக தூரநோக்குடன் மோடி சிந்திக்கின்றார். தனது பதவியேற்பு நிகழ்வில் சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து தனது தலைமைத்துவத்தின் சிறப்பை வெளிப்படுத்தினார். சார்க் நாடுகளின் கூட்டமைப்பை மோடி சிறந்த முறையில் கட்டியெழுப்புவார். இந்தியாவுடனான வரலாற்று உறவை மேம்படுத்திக் கொள்வதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும்.

இலங்கை - இந்திய உறவில் தமிழ்நாட்டின் உறவு மிக முக்கியமானதாகும். தமிழகத்தின் பிரதான அரசியல் கட்சிகளான திராவிட முன்னேற்றக்கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியன இலங்கை தொடர்பான தவறான புரிந்துணர்வுடன் உள்ளன.

வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம், பழ.நெடுமாறன் தலைமையிலான உலகத் தமிழர் பேரமைப்பு, சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, தொல். திருமாவளவன் தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியன தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள் அல்ல. அவை சமூக அமைப்புகள். எனவே, அவை குறித்து நாம் கருத்தில்கொள்ளத் தேவையில்லை.

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியா முன்வைக்கும் தீர்வு எமக்குப் பொருந்தாது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம் அன்றைய காலகட்டத்துக்கு மட்டுமே பொருந்தும். அது அந்தக் காலத்துடன முடிந்துவிட்டது. நாம் எமக்குத் தேவையான உள்நாட்டுப் பொறிமுறையினூடாகத் தீர்வு காண வேண்டும். எனவே, இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13 ஆவது திருத்தம் தொடர்பில் இரு நாடுகளின் தலைவர்களுக்குமிடையில் பேச்சு நடத்தி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.

ஆயுதப் போராட்டத்துடன் தொடர்பு வைத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு தரப்பினருக்கு யுத்தம் முடிவடைந்த கையுடன் தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அல்லது புனர்வாழ்வளித்திருக்க வேண்டும்.

தீவிரவாதத்துடன் தொடர்பு வைத்திருந்தவர்களுக்கு அரசியலில் பிரவேசிக்க இடமளிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தாா். (இ)

## புகலிட கோரிக்கையாளர்கள் 157 பேர் தொடர்பான விசாரணை ஒக்டோபரில்

157 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயற்சித்த 157 புகலிடக் கோரிக்கையாளர்களையும் அந் நாட்டு அதிகாரிகள் நாடு கடத்தத் தீர்மானித்திருந்தனர்.

இந்த நாடு கடத்தல் முயற்சிக்கு எதிராக புகலிடக் கோரிக்கையாளரகள் அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

புகலிடக் கோரிக்கையாளர் விவகாரம் தொடர்பில் நீதிமன்றில் விசேட விசாரணை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலிய கடல் எல்லைக்கு வெளியே வைத்து புகலிடக் கோரிக்கையாளர்களை கைது செய்து, அவுஸ்திரேலிய கப்பல் ஒன்றில் கடலிலேயே புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின இந்த நடவடிக்கையானது சட்டரீதியானதா இல்லையா? என்பது குறித்து வழக்கு விசாரணைகளின் போது தீர்மானிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம், அவுஸ்திரேலிய அகதிகள் முகவர் நிறுவனம் ஆகியனவும் இந்த வழக்கு விசாரணைகளில், பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தின் அதிகாரத்தை பரீட்சிக்கும் ஓர் சந்தர்ப்பமாக இந்த வழக்கு விசாரணைகள் அமையும் என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## அகதிகள் விவகார வழக்கில் ஐ.நா.சபை தலையிடக்கூடும்

அவுஸ்திரேலியாவின் நவுறு தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 157 இலங்கை புகலிடக் கோரிக்கையாளாகள் குறித்த வழக்கு விசாரணைகளில் ஐ.நா. தலையிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. அமைப்புகள் இந்த வழக்கு விசாரணையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக புகலிடக்கோரிக்கையாளர்கள் சார்பாக குரல் கொடுத்து வரும் ஜோர்ஜ் நியுஹவுஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா நடுக்கடலில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களை மாத்திரமல்ல ஏனைய நாடுகளின் அணுகுமுறையையும் பாதிக்கின்றன. இதன் காரணமாக இந்த வழக்கு விசாரணையில் சர்வதேச, உள்ளூர் மனிதவுரிமை, மனிதாபிமான அமைப்புகள் தலையிடலாம்.

அவுஸ்திரேலிய நீதிமன்ற வழக்குகளில் ஐ.நா. தலையிடுவது புதிய விடயம், பலவீனமான நிலையில் உள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகளை அவுஸ்திரேலியா நடத்தும் முறை குறித்த கவலையை இது வெளிப்படுத்துகிறது.

இது நடுக்கடலில் 157 பேர் கடத்தப்பட்ட விடயம் எனவும் இதனை ஐ.நா. ஒருபோதும் விரும்பவில்லை அவர் எனவும் தெரிவித்துள்ளார். (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி மயில்வாகனம் சேதுராணி

மட்டக்களப்பு வாழைச்சேனையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சேதுராணி கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave,Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி சுந்தரம்பிள்ளை சிவபாக்கியம்



வடமராட்சி கிழக்கு ஆழியவளையைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை சிவபாக்கியம் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue,Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஜெயரெத்தினம் தமிழ்ச்செல்வி

மட்டக்களப்பு முனைத்தீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரெத்தினம் தமிழ்ச்செல்வி(முன்னாள் எழுதுவினைஞர்- கச்சேரி, மட்டக்களப்பு) கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு St Marylebone Crematorium Cremation Service, East End Rd, London N2 ORZ,UK என்னும் முகவரியில் நடைபெறும்.

### இன்னாசிமுத்து வில்லியம் லோறன்ஸ்



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசிமுத்து வில்லியம் லோறன்ஸ் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருப்பலி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Prince Of Peace Roman Catholic Church,Scarborough,ON M1V 4E7,Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி மகாதேவா கமலாதேவி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா கமலாதேவி கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு Elgin Mills Cemetery, Visitation Chapel And Reception Centre 1591 Elgin Mills E Richmond Hill, ON L4S 1M9 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### ஐயாத்துரை குருக்கள் அனந்த சர்மா



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குருக்கள் அனந்த சர்மா கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.



### ஆறுமுகம் கந்தையா

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா மார்க்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தையா நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு 8911 Woodbine Ave இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனங்களுக்கான கடிதங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுங்கள்

## சிற்றூழியர்கள் கோரிக்கை

(கரணவாய்)


யாழ். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட நாளாந்த சிற்றூழியர்களுக்கான நிரந்தர ஊழியர் நியமனத்திற்கான நேர் காணல் இடம்பெற்று 8 மாதகாலமாகியும் இதுவரை எந்தவொரு அறிவித்தலும் இல்லை என சிற்றூழியர்களால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த நேர்காணலானது கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி இடம்பெற்றது எனவும் இந்நேர்காணலில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு அனுப்பப்பட்டு இதுவரை காலமும் எந்தவொரு பதில்களும் கிடைக்கவில்லை என சிற்றூழியர்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் தற்போது நாளாந்த சிற்றூழியர்களுக்கான வேலையிலே தாம் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளனர். அத்தோடு இந்நேர்காணலில் தெரிவான சில பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் கிடைத்துள்ளதாக தெரியவருகின்றது.

குறிப்பாக சாவகச்சேரி, காரைநகர் போன்ற பிரதேச சபைகளால் நடத்தப்பட்ட நேர்காணலில் தெரிவானவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என வடமராட்சி தெற்கு மேற்கு சபையின் நாளாந்த சிற்றூழியர்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இதுவரை காலமும் கிடைக்கப் பெறாத நியமனக் கடிதங்கள் தமக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஊழியர்களால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-60)




## புதிய நிர்வாகத் தெரிவு

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் தலைவராக ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர் வல்லிபுரம்-கந்தசாமி தெரிவு செய்யப்பட்டதுடன் உப தலைவராக ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (பிரதேசசபை உறுப்பினர்). செயலாளராக கணபதிப்பிள்ளை ஸ்ரீ ரஞ்சன் (பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்), உப செயலாளராக கந்தசாமி சிவாகரன், பொருளாளராக ஐயாத்துரை ஸ்ரீரங்கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக உறுப்பினர்களாக திருமதி சிவஞானசுந்தரம் சரஸ்வதி, பொன். தங்கராசா (சமாதான நீதவான்) வை. கந்தசாமி, இ.சக்திதாஸன் உட்பட 9 பேர் கொண்ட நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ

# இயற்கை வாழ்வியல் கூட்டுறவு மையம் வடமராட்சியில் உருவாக்கப்பட்டுள்ளது



(குடத்தனை)

மரங்களை நடுவோம் இயற்கையின் சீற்றத்தை குறைப்போம் என்ற தொனிப்பொருளில் இயற்கை ஆர்வலர்களை உள்ளடக்கி இயற்கைவாழ் வியல்கூட்டுறவுமையம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் அமைப்பானது நேற்று முன்தினம் புதன்கிழமை மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தலைமையில் வட மராட்சியில் இடம் பெற்றுள்ளது. அத்துடன் இச் செயற்றிட்டத்தின்பின் வடமராட்சியின் பல பகுதிகளில் பயன்தரு மரங்கள் நடப்பட்டுள்ளன. மேலும் இவ் வமைப்பிற்கு உறுப்பினர்கள் பலரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் தலை வராக ஓய்வு பெற்ற கிராம அலுவலர் சி. குணராசா, உப தலைவராக ஓய்வு பெற்ற அதிபர் க.தர்மலிங்கம், செயலாளராக க.புவனேந்திரன், உப செயலாளராக மசாந்தரூபன் பொருளாளராக ப.சம்பசிவதசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சத்துள்ள நஞ்சு இல்லாத உணவு உற்பத்திக்கான குடும்பவேளாண்மை திட்டம், பூமியின் பசுமை தன்மையை பேண மரம் வளர்ப்புக்கான பசுமைக் கரங்கள் திட்டம், மூலிகைகளை பாதுகாத்து வளர்த்து உணவாக உண்பதற்கான மூலிகை உணவு திட்டம், இயற்கையில் விளைகின்ற பொருட்களை பச்சையாகவே உண்பதற்கான அடுப்பில்லா சமையல் திட்டம் ஆகிய திட்டங்களை மக்கள் செயற்படுத்துவதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பினர் மேலும் தெரிவித்தனர். (இ-20)

## வாழ்வின் எழுச்சி கலந்துரையாடல்

(தும்பளை)

வாழ்வின் எழுச்சி வேலைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் இந்த கலந்துரையாடல் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-19)

## தேர்த்திருவிழா

(அளவெட்டி)

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தேர்த்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (இ-25)

## சக்கரம் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் சக்கரம் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுவதாக பெரியாழ்வார் ஆச்சிரம சக்கரம் சஞ்சிகை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் மடாதிபதி பெரியாழ்வார் ஆச்சிரமம் ஸ்ரீ வல்லிபுர சுவாமி கோவில் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது Chakkarameditor@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ தங்களது ஆக்கங்களை அனுப்ப முடியும் என அறிவித்துள்ளனர். (இ-19)

## தேசிய உற்பத்தி திறன் விருதுகளுக்கு யாழ்.மாவட்ட திணைக்களங்கள் தெரிவு

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய உற்பத்தித் திறன் விருதுகளுக்கான போட்டியில் அரச திணைக்களங்களுக்கான பிரிவில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையும் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் சங்கானைப் பிரதேச வைத்தியசாலைக்கு விசேட பாராட்டுக்குரிய விருதும் கிடைத்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மத்திய சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய சுகாதார மேன்மைக்கான விருதுக்கான போட்டியில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை என்பன விருது களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ

## மருத்துவ ஊடுகதிர்ப்படக்கருவி புங்குடுதீவு வைத்தியசாலைக்கு



புங்குடுதீவு வைத்தியசாலைக்கு 19 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ ஊடு கதிர்ப்படக்கருவி கடந்த 15 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த கருவியினை புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகரத்தினம் கனகம்மா தம்பதியினர் தமது சுவிஸ் வாழ் பிள்ளைகளின் உதவியுடன் வழங்கியுள்ளனர்.

புங்குடுதீவு வைத்தியசாலைக்கு நீண்ட காலமாக மருத்துவ ஊடு கதிர்ப் படக்கருவி அவசிய தேவையாக இருப்பதாகவும் அதனை பெற்றுத்தருமாறும் புங்குடுதீவு வைத்தியசாலையின் வைத்தியர் சரவணபவன், சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் உள்ளிட்ட ஏனைய நாடுகளிலுள்ள புங்குடுதீவு ஒன்றியங்கள் மற்றும் தனிப்பட்ட சிலரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தார். இவ்விடயத்தினை கவனத்திற் கொண்ட மேற்படி குடும்பத்தினர் இம் மருத்துவ ஊடு கதிர்ப்பட க் கருவியினை வழங்கியுள்ளனர் (இ-23-250)




## இந்துசமய அற்புதங்கள் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழாவை முன்னிட்டு அன்றைய தினம் இந்து சமய அற்புதங்கள் எனும் நூல் அடியவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

ஸ்ரீவாணி வெளியீட்டகத்தின் 6 ஆவது வெளியீடாக மலரவுள்ள இந்நூலினை நல்லூர் ஆலய முன்றிலிலுள்ள யாழ் மாநகர சபை மஹோற்சவ காலப் பணிமனையிலும் தேரடிச்சித்தர் செல்லப்பாசுவாமிகள் நினைவாலயத்திலும் அறுபத்து மூவர் மடத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



வலிகாமம் வடக்கு மாவை கலட்டி கிராமத்திற்கான மின்விநியோகத் திட்டம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டபோது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## வயோதிபப் பெண் மாயம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கிராமத்தில் வயோதிபப் பெண்ணொருவர் கடந்த நான்கு நாட்களாக காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உடுத்துறை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை (வயது-92) என்பவரே காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக உடுத்துறை கிராம அலுவலரை தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த 4 நாட்களுக்கு மேலாக குறித்த வயோதிபப்பெண் காணாமற் போயுள்ளதாகவும் அவர் எங்கு சென்றார் என்பது மர்மமாக உள்ளது எனவும் இது தொடர்பாக மருதங்கேணிப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளதாகவும் மேற்படி கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதோடு தேடுதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் இரண்டு பட்டால்
கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாங்கனிக்காக தன் உடையை களைந்த முருகனின் 'எதிர்ப்பு அரசியல்' பார்!

நல்லூர்க் கந்தப்பெருமானின் ஆலய மஹோற்சவத்தில் இன்று காலை மாம்பழத் திருவிழா மிகவும் அற்புதமாக நடைபெறும். விடியற்காலைப் பொழுதில் நல்லூர்க் கந்தப்பெருமானின் முன்றலில் வேற்பெருமான் பழனி ஆண்டியாக எழுந்தருளும் காட்சியை காண்பதற்கு மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே என்ற தேவார வரிகளையே கூறமுடியும்.

அந்தளவிற்கு ஆண்டிக் கோலத்தில் நல்லூர்ப் பெருமான் தரும் காட்சி கிடைத்தற்கரியபேறு எனலாம்.

இஃது நல்லூரில் நடக்கும் மாம்பழத் திருவிழாவின் மிகச் சுருக்கமான பகிர்வு.

இப்போது மாங்கனி பற்றிய புராணக்கதை என்ன? என்பது பற்றி ஆராய்வதே இங்கு பொருத்துடையது.

ஒருநாள் நாரதமுனிவர் சிவப்பரம்பொருள் வீற்றிருக்கும் கைலைக்குச் செல்கிறார். அங்கு பார்வதி பரமேஸ்வரனைத் தரிசித்து, சுவாமி இன்று கிடைத்தற்கரிய மாங்கனி ஒன்றைப் பெற்றுக் கொண்டேன். அதைத் தங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போகவே வந்தேன் என்றார் நாரதர்.

சரி, மாங்கனியை நம் பிள்ளைகள் விநாயகருக்கும் முருகனுக்கும் கொடுக்க வேண்டும் அப்படித்தானே! என்றார் சிவன்.

ஆம் சுவாமி! என்பது நாரதரின் பதிலாக இருந்தது. எனினும் ஒரு நிபந்தனை என்றார் நாரதர்.

என்ன நிபந்தனை?

சுவாமி! இந்த கிடைத்தற்கரிய மாங்கனியை பிரித்தலாகாது என்றார். மாங்கனியைப் பிரிக்கக் கூடாது என்ற உடனேயே சிவனின் குடும்பத்தில் பிரச்சினையாகி விடுகிறது.

எங்கெல்லாம் பிரிப்பதற்கு அனுமதி இல்லையோ அங்கெல்லாம் பிரச்சினைதான். இதற்கு இலங்கை மட்டுமல்ல; சிவனின் குடும்பமும் விலக்கல்ல என்றாகி விடுகிறது நிலைமை.

இப்போது மாங்கனியை யாருக்குக் கொடுப்பது என்பதற்காக ஒரு போட்டி நடத்தப்படுகிறது. விநாயகன், முருகன் இருவரில் யார் முதலில் உலகைச் சுற்றி வலம் வருகிறார்களோ அவருக்கே மாங்கனி என்ற அறிவிப்பு விடுக்கப்படுகின்றது.

ஆளுக்குப் பாதியாக மாங்கனியைக் கொடுங்கள் என்றால் இந்தப் போட்டிக்கு அவசியம் இருந்திருக்காது.

மாங்கனியைப் பிரிக்கக் கூடாது. ஒருவரே அதனை முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்ற நிபந்தனையால் உடன் பிறப்புகளுக்குள் போட்டி.

போட்டி அறிவித்தலை அடுத்து முருகன் மயிலேறி உலகை வலம் வரப் புறப்பட்டு விட்டார். அறிவின் வடிவாகிய விநாயகன் தன் தாய் தந்தையை வலம் வந்து வணங்கி, உலகை வலம் வந்தாகக் கூற, மாங்கனி அவரின் கையில் ஒப்படைக்கப்படுகின்றது.

சில மணித்துளிகள் கடந்து, உலகைச் சுற்றிய முருகன் வருகிறார். மாங்கனி பிள்ளையாரின் கையில் இருக்கிறது.

முருகனுக்கு கடுங்கோபம். இது உரிமைப்பிரச்சினை. ஆகவே எதிர்ப்பு அரசியலில் இறங்குகிறார் அவர். தன் ஆடைகளைக் களைகின்றார். ஆண்டிக் கோலத்தில் தண்டாயுதத்தைத் தூக்குகிறார். குன்றேறி தனக்கொரு நாடு அமைக்கிறார். அதுவே பழனி மலை என்றாகிறது. கூடவே குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்றாகிறது நிலைமை.

இவ்விதத்தில் இணக்க அரசியலை விட எதிர்ப்பு அரசியல் பரவாயில்லையே! என்று எண்ணத் தோன்றுகிறது. இப்போது நாரதர் பற்றி நாம் கடுமையாகச் சிந்திக்க வேண்டும்.

நாரதர் மாங்கனி மூலம் சிவனின் பிள்ளைகளிடையே இருந்த ஒற்றுமையைக் குலைத்தார். முருகன் ஆர்ப்பாட்டம் செய்தார். பார்வதி பதறிப் போனாள். சிவன்; மகனே! முருகா என்று பின் தொடர்ந்தார். பிள்ளையார் தன் அறிவின் கூர்மை இப்படியாகி விட்டதே என்று கலக்கம் உற்றார்.

எல்லாவற்றுக்கும் நாரதரே காரணம். மாங்கனியைக் கொடுத்த நாரதர் பிரிக்க அனுமதித்திருந்தால் இணக்க அரசியல் வெற்றி தந்திருக்கும்.

என்ன செய்வது! நாரதரை வீட்டுக்குள், நாட்டுக்குள் வர அனுமதித்தது நடந்த முதற் பிழை. இதுதான் புராணக்கதை.

இதில் இருந்து நாம் பலவற்றைக் கற்க வேண்டும். அதில் ஒன்று சுப்பிரமணிய சுவாமி போன்றவர்களை இலங்கைக்குள் அனுமதிக்கக் கூடாது. அனுமதித்தால் உள்ளும் புறமும் கலகம்தான்

## கோரிக்கைகளை முன்வைக்கமுடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்ற கல்வித்துறை தொடர்பான தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியோருடைய கோரிக்கைகளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக யாழ்.மாவட்டச் செயலகத்தில் (அறை இல.42) மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அலுவலகம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அலுவலக இணைப்பாளர் பி.என். சுதர்சன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்.உரும்பிராய் இராமகிருஷ்ணன் நலன்புரி நிலையத்தால் இராமகிருஷ்ண மிஷன் வெளியீடுகளின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

சப்பறம் பூங்காவனம், வைரவர் மடை ஆகிய நாட்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் இரவு 8 மணிவரையிலும் தேர், தீர்த்தத் திருவிழா நாட்களில் காலை 7 மணி முதல் இரவு 8 மணிவரையும் ஆலய பின்வீதியிலுள்ள மூத்ததம்பி அன்னதானமடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சியில் சப்பறம், தேர் உற்சவ நாட்களில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் துறவியான ஸ்ரீமத் சுவாமிரிதமயானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் இதில் மாணவர் முதல் பெரியார் வரை மாணவர்களுக்கு இறை நம்பிக்கை, ஆன்மீக நாட்டம், நற்பழக்கங்கள், தன்னம்பிக்கை, ஆளுமைத் திறன் போன்றவற்றை வளர்க்கக் கூடிய குருதேவர் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர், தூய அன்னை ஸ்ரீசாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் கருத்துக்கள் உள்ள நூல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (இ

### அமைதியின் சொற்கள்

இந்த சுவாசத்தோடு ஒரு உறவை வைத்திருக்கிறீர்களா? *பிரேம் ராவத்*

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

#### வீட்டைச் சுத்தமாக்குங்கள்

★ பரிசுத்த நினைவின் காரணமாக எத்தனையோ சிறிய நன்மைகள் பெரிய நன்மைகளாக ஆகிவிடுகின்றன.

★ பரிசுத்த எண்ணமில்லாத காரணத்தினால் எத்தனையோ பெரிய நன்மைகள் அற்பக் காரியங்களாகி விடுகின்றன.

★ அல்லாஹ் பரிசுத்தமானவன். பரிசுத்தத்தையே விரும்புகிறான். எனவே, உங்கள் இல்லங்களை பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

★ எவர் பள்ளிவாசலை கட்டுகிறாரோ அவருக்காக அப்பள்ளிவாசலைப் போன்ற வீடு சொர்க்கத்தில் கட்டப்படுகின்றது.

★ இறைவனை நீ பார்ப்பது போல் பயந்தவனாகத் தொழு! அவனை நீ பார்க்காவிட்டாலும் உன்னை அவன் பார்த்துக் கொண்டே இருக்கின்றான்.

★ ஏழைகளின் துஆ (பிரார்த்தனை) இல்லை என்றால் செல்வந்தர்கள் அழிந்தே போவார்கள்.

★ ஒருவருக்கு பொருள்வசதி இருந்தும் ஜகாத் (ஏழைவரி) கொடுக்கவில்லையானால் அவருக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரம் வானவர்கள் நரகத்தைப் பற்றி எச்சரிக்கை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

## சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கொழும்பு)

தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான உதயதம்பி ஜெயக்குமார் (வயது 34) என்ற குடும்பஸ்தரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதி இரவு மது போதையில் தனக்குத்தானே தீமூட்டிய மேற்படி குடும்பஸ்தர் பலத்த தீக்காயங்களுடன் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்குப் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. (இ

## பிரேரணை விவாதத்தின் போது 7 உறுப்பினர்கள் வெளிநடப்பு

வடமாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்தின் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வட மாகாண எதிர்க் கட்சி உறுப் பினர்கள் 7 பேர் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

வட மாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தொடர் கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபைக் கட்டிடத் தொகுதியில நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்குழுவை இலங்கைக்குள் வர அனுமதிக்க வேண்டும், மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக் காலத்தை நீடித்தல் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் பிற தவறுகள் தொடர்பில் மனித உரிமைப் பேரவை விசாரணை செய்ய வேண்டும் உள்ளிட்ட பிரேரணைகளை சபையில் சிவாஜிலிங்கம் முன்வைக்க இருந்தார்.

எனினும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, நடைமுறைக்குச் சாத்தியமற்ற பிரேரணைகளை ஏற்கமுடியாது. அத்துடன் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடப்போம் எனக் கூறி சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு, இலங்கைக்கு எதிராக செயற்படுகின்ற பிரேரணைகளையும் ஏற்க முடியாது என்றார்.

இந்தப் பிரேரணைகள் மன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் போது தாங்கள் வெளிநடப்புச் செய்வதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர் முகமது ரயிஸ் மட்டும் சபை அமர்வுகளில் கலந்து கொண்டிருந்தார்.

வட மாகாண சபையில் 8 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் 30 ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## மாவட்ட பேரவையின் நிர்வாகசபைத் தெரிவு

யாழ்.மாவட்டப் பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதால் மாநகரசபை முதல்வர், நகரசபைத் தலைவர், பிரதேச செயலாளர், விசேட ஆணையாளர், திட்டமிடல் பணிப்பாளர், உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச சபைத் தலைவர்கள், உதவி மாவட்டச் செயலர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பேரவையின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (இ

## செயற்குழுக் கூட்டம்

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (இ

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**22.08.2014 இற்கான வினா**
**முருகனின் முகங்கள் ஆறும் உணர்த்தும் அர்த்தம் என்ன?**
**21.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**
**''ஸரஸ்வதி நமஸ்துப்யம்**
**வரதே காம ரூபிணி**
**வித்யாரம்பம் கரிஷ்யாமி**
**ஸித்திர்பவது மே ஸதா'' என்ற ஸரஸ்வதி மந்திரத்தின் பொருள் யாது?**
**வரங்களைத் தருபவரும் விருப்பங்களை பூர்த்தி செய்பவருமான சரஸ்வதியை வணங்குகின்றேன். வித்தியாரம்பத்தை செய்யும் எனக்கு எப்பொழுதும் வெற்றியை அருளுங்கள்.**
**20.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**
**அஹிம்சை என்னும் விழுமியம் மூலம் நீர் விளக்கிக் கொள்வது யாது?**
☞ ஜீவராசிகள் அனைத்திற்கும் எண்ணம்,சொல்,செயல் என்பனவற்றால் எவ்வித தீங்கும் விளைவிக்காமல் **வரையறையின்றி** அன்பை வெளிப்படுத்தல் ஆகும்.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்துறை செந்தமிழ் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## கம்பர்மலை யங்கம்பன்ஸ் வெற்றி



கம்பர்மலையங்கம்பன்ஸ்விளையாட்டுக்கழகம் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகமும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டத்தின்போக்கைதமது அணியின் கட்டுப்பாட்டில் வைத்திருந்த யங்கம்பன்ஸ் அணி அந்த அணியின் வீரர் குகரதன் எதிரணியினருக்கு தண்ணிகாட்டி 8 ஆவது, 14 ஆவது, 34 ஆவது மற்றும் 44 ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து நான்கு கோல்களைப் போட்டு அசத்த பிரகாஷ் 51 ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும் போட 5:0 என்ற கோல் அடிப்படையில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தில் வல்வை நெடியகாடு விளையாட்டுக்கழகமும், செம்பியன்பற்று சென்.பிலிப்ஸ் நேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

சமபலத்துடன் இரு அணியும் மோதி மைதானத்தின் உள்ளேயும் வெளியேயும் ஒரு வகையான பரபரப்பு நிலை காணப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் சென். பிலிப் நேரிஸ் அணி வீரர் டிலான் 7 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டார். இதனை அடுத்து இரு அணி வீரர்களும் கோல் போடும் முயற்சியில் இறங்க அது முடியாமல் போனது.

அடிக்கடி இரு பகுதி கோல் கம்பங்களுக்கு அண்மையாகப் பந்து சென்று வந்ததே தவிர கோல் பெறமுடியவில்லை. இதனால் 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழக வீரர் வினோத் அசத்தலான கோல் ஒன்றைப் போட ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. இந்தச் சூழ் நிலையில் 42 ஆவது நிமிடத்தில் பிலிப் நேரிஸ் அணி வீரர் டிலான் மேலும் ஒரு கோலையும் நெடியகாடு விளையாட்டுக் கழகவீரர்விஸ்வரூபன்ஒருகோலையும் போட 3:2 என்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

அடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் முதலில் இரு அணியினரும் மேலதிகமாக வழங்கப்பட்ட உதையை நெடியகாடு கோலாக்க பிலிப் நேரிஸ் அணியினர் தவறவிட்டனர்.

இதனால் 6:5 என்ற கோல் அடிப்படையில் வல்வை நெடியகாடு விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (சு)

## யாழ்.மத்திய கல்லூரி வெற்றி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் கண்டிநுவவெலமத்தியகல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப் பிரிவினருக்கான தேசிய மட்ட பிரிவு 3 இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது.

அண்மையில் கண்டி அஸ்கிரிய பொலிஸ் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி நுவவெல மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

'முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி நுவவெல மத்திய கல்லூரி அணியினர் 48 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கருணாதிலக 17 ஓட்டங்களையும் குமார 19 ஓட்டங்களையும் திலகரட்ண 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாக அலன்ராஜ் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கௌதமன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கார்த்தீபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

98 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 28 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் ஜெறொசன் 38 ஓட்டங்களையும் அலன்ராஜ் 20 ஓட்டங்களையும் வினோஷன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கண்டி நுவவெல மத்திய கல்லூரி அணி சார்பில் சேனநாயக்க 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் தர்மரெட்ணா 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீ[illegible]தினர்.

யாழ்மத்தியகல்லூரிஅணி8 இலக்குகளால் வெற்றி பெற்றது. (சு)

## தாச்சி சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆதரவில் மாவட்ட மட்டத்தில் தாச்சிப் போட்டிகளை மின்னொளியில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

தொடரின் அரையிறுதிப் போட்டிகள் இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது.

இன்று இடம்பெறவுள்ள முதல் அரையிறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

நாளை இடம்பெறவுள்ள போட்டியில் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகமும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க-23)

# உதைபந்தாட்ட போட்டி யுனைற்றட் அணி வெற்றி

மன்னார் காற்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட இரண்டாம் தர அணிகளுக்கிடையிலான் விலகல் முறையிலான ஆட்டம் அண்மையில் முடிவுக்கு வந்தது.

16 அணிகள் இதில் பங்குபற்றிய இச்சுற்றின் இறுதிப்போட்டி மன்னார் பொது விளையாட்டரங்கில் முருங்கன் பொது சன விளையாட்டுக்கழகத்துக்கும் விடத்தல் தீவு யுனைற்றட் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்றது.

போட்டியின் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் மிகவும் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் விளையாடினர்.

போட்டியின் 8 ஆம் நிமிடத்தில் யுனைற்றட் அணியின் வீரர் நிதர்சன் தமது அணிக்காக முதலாவது கோலைப் போட 26 ஆம் நிமிடத்தில் மீண்டும் யுனைற்றட் அணியின் வீரர் சுரேந் தமது அணிக்காக இரண்டாவது கோலை பனால்டி முறையில் போட்டதையடுத்து இடைவேளையின்போது 2:0 ஆக காணப்பட்டது.

இரண்டாம் பாதியில் 50 ஆம் நிமிடத்தில் மீண்டும் யுனைற்றட் அணியின் சார்பில் தீபன் மூன்றாவது கோலைப் போட்டு அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இருந்தும் முருங்கன் அணியினர் இறுதிவரை கடுமையாக போராடியும் ஆட்டம் 3:0 என்ற கோல் கணக்கில் முடிவுற்றது.



2014 ஆம் ஆண்டுக்கான லீக்கின் இரண்டாம் தர அணிகளுக்கிடையிலான வெற்றிக்கிண்ணத்தை விடத்தல்தீவு யுனைற்றட் விளையாட்டுக்கழகம் தனதாக்கிக் கொண்டது. (க)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியான அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடைபெறும் இவ் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் இன்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்[illegible] தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (சு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 2 ஆம் நிலை வீரராக பெடரர்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான யு.எஸ்.ஓபன் டெனிஸ் தொடர் நியூயோர்க்கில் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இத்தொடருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் வீரர்களின் நிலைப் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் முதல் நிலை வீரராகவும், 3 ஆம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 2 ஆம் நிலை வீரராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

உலகின் 2 ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால் காயம் காரணமாக இப்போட்டியில் பங்கேற்காததால், பெடரருக்கு 2 ஆம் இடம் கிடைத்துள்ளது. இதனால், பெடரர், இறுதிப் போட்டியில் மட்டுமே ஜோகோவிச்சை சந்திக்க இருக்கிறார். தொடர்ந்து 14 ஆவது முறையாக இத்தொடரில் விளையாட உள்ள பெடரர் 2004 முதல் 2008 வரை 4 முறை யு.எஸ் ஓபன் பட்டத்தை வென்றுள்ளார். தனது 18 ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை எதிர்நோக்கி பெடரர் களமிறங்க உள்ளார். (க)



# அவுஸ்திரேலியாவிலும் இந்தியா மண்ணை கவ்வும்

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் இந்தியா 4 டெஸ்டிலும் கண்டிப்பாக தோற்கும் என அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளைன் மெக்ராத் சவால் விட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட தொடரை 1:3 என்ற கணக்கில் மோசமாக பறிகொடுத்தது இந்திய கிரிக்கெட் அணி.

இதைத் தொடர்ந்து டிசம்பர், ஜனவரி மாதங்களில் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்டுகளிலும், முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரிலும் (3 ஆவது அணி இங்கிலாந்து) விளையாட இருக்கிறது.

இந்நிலையில் வெளிநாட்டு மண்ணில் தொடர்ந்து சொதப்பி வரும் இந்திய அணிக்கு அவுஸ்திரேலிய தொடரில் ஒரு வெற்றியும் கிடைக்காது என கிளைன் மெக்ராத் ஆரூடம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

அவுஸ்திரேலிய அணி, உலகில் எங்கு விளையாடினாலும், தங்களது முழு திறமையை கணிசமாக வெளிப்படுத்தினாலே அவர்களை வீழ்த்துவது என்பது உண்மையிலேயே கடினமான காரியம். இந்நிலையில் இந்திய அணி அவுஸ்திரேலியாவிடம் மோதவுள்ளது.

கடந்த ஆண்டு இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஆடிய போது, 0:5 என்ற கணக்கில் படுதோல்வியை சந்தித்தது.

எங்களிடம் தோல்வி கண்ட அந்த இங்கிலாந்து அணி தற்போதைய தொடரில் சிறப்பாக விளையாடி இந்தியாவை 3:1 என்ற கணக்கில் வீழ்த்தி இருக்கிறது.

எனவே கண்டிப்பாக இந்திய அணிக்கு அவுஸ்திரேலிய தொடர் மிகவும் கடினமாக இருக்கப்போகிறது என்பது சொல்லி தெரிய வேண்டியதில்லை.

வெளிப்படையாக சொல்ல வேணடும் என்றால், அவுஸ்திரேலிய மணணில் இந்திய அணி எந்த ஒரு டெஸ்டிலும் வெற்றி பெறும் என்று நான் நினைக்கவில்லை. எனது கணிப்பு அவுஸ்திரேலியா தொடரை 4:0 என்ற கணக்கில் கைப்பற்றும் என்பது தான்.

எனது கணிப்பு தவறு என்பதை நிரூபிக்க வேண்டியது இந்திய அணியை பொறுத்தது. மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்புவதற்கான வழிமுறைகளை இந்திய வீரர்கள் கண்டறிய வேண்டும் என்று கூறியுள்ளார். (க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கப் புலிகளை வீழ்த்தியது கரீபியன்ஸ்

மேற்கிந்தியதீவுகள், பங்களா தேஷ் அணிகளுக்கிடையில் நடை பெற்ற முதலவாது ஒருநாள் சர்வ தேசப் போட்டியில் கெரோன் பொலார் டின் சிறந்த மீள் வருகை மூலம் மேற் கிந்திய தீவுகள் அணி தோல்வியில் இருந்து தப்பி 3 விக்கெட்களினால் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப் பாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர் களில் 9 விக்கெட்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனா மல் ஹக் 109 ஓட்டங்களையும், தமிம் இக்பால், நசீர் ஹொசைன் ஆகி யோர் தலா 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டுவைன் பிராவோ 4 விக்கெட்களைக் கைப் பற்றினார்.




பதிலுக்கு துடுப்பாடிய மேற்கிந்திய தீவுகள் அணி ஆரம்ப விக்கெட்களை வேகமாக இழந்து தோல்விப் பாதை யில் சென்ற வேளையில் தினேஷ் ராம்டின், கெரோன் பொலார்ட் ஆகி யோர் இணைந்து 145 ஓட்டங்களை ஆறாவது விக்கெட் இணைப்பாட்ட மாக பெற்றனர். கெரோன் பொலார்ட் 89 ஓட்டங்களையும், தினேஷ் ராம் டின் 74 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அல் அமீன் ஹொசைன் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக கெரோன் பொலார்ட் தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் அடங்கிய தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 1 இற்கு 0 என முன்னிலை பெற்றுள்ளது. (க)

## நியூஹவன் டென்னிஸ் சானியா ஜோடி வெற்றி



அமெரிக்காவின் நியூஹவன் நகரில் கனெக்டிகட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதன் பெண்கள் இரட்டையர் முதலா வது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, ஜிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி 6-7 (3-7), 7-6 (7-2), 10-7 என்ற செட் கணக்கில் செக்குடியரசின கரோ லினா பிலிஸ்கோவா- கிறிஸ்டினா பிலிஸ் கோவா இணையை சாய்த்தது.

இந்த வெற்றியை ருசிக்க சானியா கூட்டணி 1 மணி 57 நிமிடங்கள் செல வழிக்க வேண்டி இருந்தது. முன்ன தாக ஒற்றையர் 2-வது சுற்றில் 2-ம் நிலை வீராங்கனை ருமேனியாவின் சிமோனா ஹலேப் 2-6, 6-4, 3-6 என்ற செட் கணக்கில் 68-ம் நிலை வீராங்கனை சுலோவக்கியாவின் மாக்டலினா ரைபரிகோவாவிடம் அதிர்ச்சி தோல்வியை தழுவினார். (க)

## காதலிகளால் கவிழ்ந்த இந்தியா

காதலி மற்றும் மனைவிகளி னால் தான் இந்திய வீரர்கள் சரிவர விளையாடவில்லை என்று இந்திய கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

இந்திய அணி இங்கிலாந்து சுற் றுப்பயணம் மேற்கொண்டு விளை யாடி வருகிறது. இதன் டெஸ்ட் தொட ரில் இந்திய அணி மோசமான தோல்வியைத் தழுவியது.

பலரும் இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கும் போது வீரர்களின் மனைவி மற்றும் காதலி தான் இதற்கு காரணம் என்று இந்திய கிரிக்கெட் சபை ஒரு தகவலை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து தொடருக்கு இந் திய அணி கிளம்பிய போது வீரர்க ளுடன் மனைவியரும் செல்ல இந்திய கிரிக்கெட் சபை அனுமதி கொடுத்திருந்தது.

ஆனால் போன இடத்தில் 3-1 என்ற கணக்கில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா இழந்து கடுமையான விமர்சனத்துக் குள்ளானது.

இந்திய அணி வீரர்களிலேயே



மிகப் பெரிய சொதப்பலாக ஹோலி தான் இருந்தார். 10 இன்னிங்ஸ்க ளில் மொத்தமே 134 ஓட்டங்கள் தான் எடுத்தார். இதில் 2 முறை டக் அவுட் வேறு ஆனார்.

ஒரு நாள்போட்டிகள், இருபது -20 டெஸ்ட் என கலக்கலாக ஆடிய ஹோலி இங்கிலாந்தில் சொதப்ப அவரது காதலி அனுஷ்கா சர்மா தான் காரணமாக இருந்துள்ளார்.

விராட் ஹோலி தன்னுடன் காதலி அனுஷ்காவையும் அழைத் துச் செல்ல சிறப்பு அனுமதி கோரியி ருந்தாராம். கட்டுப்பாட்டு சபையும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதேபோல அஸ்வின், சட்டே ஸ்வர் புஜாரா, முரளி விஜய், ஸ்டு வர்ட் பின்னி, கௌதம் காம்பீர் ஆகி யோர் கட்டுப்பாட்டுச் சபையிடம் அனுமதி பெற்று தங்களது மனைவி களையும் அழைத்துச் சென்றனர்.

இது குறித்து கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில், டெஸ்ட் தொடர் முழுவதும் மனைவி யரும், தோழியரும் கூடவே இருந்த தால், வீரர்களால் விளையாட முடி யாமல் போனது.

அவர்கள் பயிற்சி செய்ய நினைத் தாலும் இவர்கள் விடுவதில்லை. ஊர் சுற்றப் போகலாம் என அழைத் துள்ளனர். பிறகெப்படி வீரர்களால் கவனமாக ஆட முடியும்.

இதைத் தொடர்ந்து வீரர்களுடன் எவ்வளவு நாட்களுக்கு மனைவியர் உடன் இருக்கலாம் என்பது குறித்து இனி வரையறை நிர்ணயிக்கப்படும் என்று கூறியுள்ளார். இந்தியக் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபையின் உயர் அதி காரி ஒருவர். (க)

## எவ்வளவு வாங்கினாலும் தோனி தான் தலைவர்

### இந்திய கிரிக்கெட் சபை அறிவிப்பு




இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி மோசமாக விளையாடி தோற்றது. டெஸ்ட் தொட ரை 1-3 என்ற கணக்கில் இழந்தது.

இந்த தோல்வியால் கப்டன் தோனி கடும் விமர்சனத்துக்கு உள்ளானார். முன்னாள் வீரர்கள் பலர் அவரது கப்டன் பதவி குறித்து கேள்வி எழுப்பி இருந்தனர். டெஸ்ட அணித்தலைவர் பொறுப்பில் இருந்து அவரை நீக்க வேண்டும் என்றும் சில வீரர்கள் கரு த்து தெரிவித்து இருந்தனர்.

இந்த நிலையில் கப்டன் பதவியில் இருந்து தோனியை நீக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று இந் திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செய லாளர் சஞ்சய் பட்டேல் தெரிவித்து ள்ளார். உலக கோப்பை போட்டி தொடங்க இன்னும் 6 மாதம் உள்ள தால் தோனியை நீக்க கிரிக்கெட் சபை விரும்பவில்லை.

இதற்கிடையே தோனிக்கு இங்கி லாந்து முன்னாள் கப்டன் மைக் பிரியர்லி கண்டனம் தெரிவித்து ள்ளார் அவர்கூறும்போது, தோனிகப்டன் பதவி டெஸ்ட் தரத்தில் இல்லை. மேலும அவரது விக்கெட் கீப்பிங்கும் சரியி ல்லை என்று தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 வயது சிறுமி கர்ப்பம் 17 வயது சிறுவன் கைது

யாழ். துன்னாலை தங்குச்சம் பாட்டிப் பகுதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமியை கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் அதேயிடத்தைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவனை சந்தேகத்தின் பேரில் நேற்று வியாழக்கிழமை கைது செய்ததாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸார் மேலும் கூறுகையில்,

சிறுமியினுடைய பெற்றோர்களின் அனுமதியுடன், மேற்படி சிறுவன், சிறுமியுடன் வாழ்ந்து வந்துள்ளான். இதனால், சிறுமி கர்ப்பமடைந்துள்ளார் என சந்தேகிக்கப்படுகிறது. இந்நிலையில், சிறுமி கர்ப்பவதிகள் சிகிச்சையகத்திற்குச் சென்று சிகிச்சை பெறும் போது, சிறுமி 14 வயதுடையவர் என்று அடையாளம் கண்டுகொண்ட குடும்பநல உத்தியோகத்தர், கரவெட்டி சுகாதார வைத்தியதிகாரிக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்து, சுகாதார வைத்தியதிகாரி, கரவெட்டிப் பிரதேச சிறுவர் நனனடத்தை அதிகாரியின் கவனத்திற்குக் இச்சம்பவம் குறித்து தெரியப்படுத்தியுள்ளார்.

விபரங்களை க்வனித்த சிறுவர் நன்னடத்தை அதிகாரி கடந்த புதன் கிழமை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த சிறுமி நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டதுடன், சிறுவன் நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டார். இருவரையும யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-11)

# கூட்டமைப்பு டில்லி பயணம் இன்று சுஷ்மாவுடன் பேச்சு

(புதுடில்லி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்திய தலைநகர் புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து யு.எல் 195 விமானத்தின் மூலம் இந்தியா சென்றடைந்துள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சமபந்தன் தலைமையில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், பொன். செல்வராஜா மற்றும் சுபாஸ் சந்திரன ஆகியோரடங்கிய அறுவர் கொணட உயர் மட்டக்குழுவே பயணம் மேற்கொண்டுள்ளது.

எனினும் இக் குழுவில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பயணமாகவில்லை.

புதுடில்லி சென்ற இவ்வுயர் மட்டக்குழுவானது இன்று வெள்ளிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்திக்கவுள்ளது.

நாளை சனிக்கிழமை இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள நரேந்திர மோடியுடன் தமிழ்த் தேசிய்க் கூட்டமைப்பு முதன் முதலாக விசேட சந்திப்பில் பங்கேற்கவுள்ளது.

அத்துடன் குறித்த காலப்பகுதியில் இந்திய மத்திய அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதிகளுடனும் விசேட பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொள்ளவுள்ளது. (செ-11)

# அழகு ஊசிகளால் எயிட்ஸ் ஆபத்து

(கொழும்பு)

முகத்தில் உள்ள பருக்கள், கரும்புள்ளிகளை அகற்ற அழகு நிலையங்களில் பயன்படுத்தப்படும் ஊசிகள் ஊடாக எயிட்ஸ் மற்றும் செங்கண்மாரி ஆகிய நோய்கள் பரவும் ஆபத்து இருப்பதாக இலங்கை சரும நோய்கள் தொடர்பான விசேட வைததிய நிபுணர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவியான மருத்துவர் சாலுக்யா குணசேகர தெரிவித்துள்ளார்.

அழகு நிலையங்களுக்கு செல்லும் சிலர் தமது முகத்தில் இருக்கும் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை அப்புறப்படுத்தும் சிகிச்சைகளை செய்து கொள்கின்றனர்.

அவற்றை அகற்ற பயன்படுத்தப்படும் ஊசிகள் கொதிக்கும் நீரில் இட்டு சுத்தப்படுத்தப்படுவதில்லை என்பதால், அவற்றின் ஊடாக நோயகள் பரவும் ஆபத்து காணப்படுகிறது. இந்த ஊசிகள் மூலமாக பல்வேறு வகையான வைரஸ்கள் பரவக் கூடும்.

முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை சுத்தப்படுத்த அழகு நிலையங்களில் எம்லா என்ற மருந்து பயன்படுத்தப்படுகிறது. இந்த இரசாயனம் மருத்துவர்கள் பயன்படுத்தும் உடலை மரத்து போக செய்யும் இரசாயன மருந்தாகும்.

இதனை அழகு நிலையங்களில் பயன்படுத்துவது தவறானது. இப்படியான மருந்துகளை பயன்படுத் தும் போது ஏதேனும் அவசர நிலைமை ஏற்பட்டால், அவர்களிடம் சிகிச்சைகளை செய்வதற்கான முறை இல்லை. இதனால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும்.

மருத்துவமனைகளில் செய்யும் தசை பகுதிகளை சுடுவது, அறுவை சிகிச்சைகளை அழகு நிலையங்களில செய்யக் கூடாது எனவும் மருத்துவர் குணசேகர மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# விசாரணை எல்லையை...

இவ் அமர்வில் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால்,

தமிழர்கள் மீதான இனப் படுகொலைகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்துமாறு கோரல்

மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலகம் இலங்கை மீதான விசாரணைக்கால எல்லையை நீடித்தல்.

இனப் படுகொலை உட்பட சகல குற்றங்களும் 1974 ஆம் ஆண்டிலிருந்து விசாரிக்கப்படல்.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினால் நியமிககப்பட்ட விசாரணைக்குழு இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ விசாரணையை நடத்த அனுமதிக்க வேண்டும் என்ற 3 பிரேரணைகளை முன் மொழிந்தார்.

இப் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உறுப்பினர் சயந்தன் கூறியது போன்று,

இப் பிரேரணை இங்கு இப்போது நிறைவேற்றப் படுவதனால் பல்வேறு பின்னடைவுகளை அது சந்தித்து விடலாம்.

இப் பிரேரணை தொடர்பில் கூட்டமைப்புத் தலைவர்களுடன் பேசி ஆராய்ந்து இப் பிரேரணையினை மேலும் வலுப்படுத்துவதற்கு முன் வரைவினை மேற்கொள்ள வேண்டும்.

ஆகையால் இப் பிரேரணையினை இப்போது சபையில் நிறைவேற்றுவது பொருத்தமற்றது என்றார் முதலமைச்சர். (செ-4)

# தமிழ் அரசி...

சந்திக்க விடாது கீழ் மட்ட அதிகாரிகள் தடுத்தும் வருகின்றனர்.

இவர்கள் மீது எந்தவொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படாத நிலையில் வழக்குத்தாக்கல் செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நேற்று நடைபெற்ற மாகாண சபை அமர்வில் அனந்தி தெரிவித்தார்.

அனுராதபுரச் சிறைச்சாலையில் ஆர்.சுரேஸ், அன்ரன் சாம்ஷன், கோபினாத், ஆகிய 3 கைதிகளே இவ்வாறு துன்புறுத்தலுக்கு ஆளாகி இருப்பதாகவும் இது தொடர்பில் அவர்களினை நேரில் சென்று சந்திக்கவுள்ளதாகவும் தெரிவித்த மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான சயந்தன் அவர்களது சட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சிறைச்சாலைக் கைதிகள் கடந்த சில தினங்களாக சிறைக்குள் உணவு தவிர்ப்பு போராடடத்தில்ஈடுபட்டு வருகின்றமையும குறிப்பிடத்தக்கது. (செ-4)

# விசாரணை...

வரும் போது சர்வதேச விசாரணைகளுக்கும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று யொலண்டா கோரிக்கை விடுத்தார். (செ-11)

# சுவாமியின் துரோகத்தை...

விமர்சனம் செய்திருந்தேன். அன்று அவரை சந்தித்து படம் எடுத்து ஊடகங்களில் விளம்பரம் தேடியவர்கள் தமது மாகாணசபை உறுப்பினர் மூலமாக சுவாமி அல்ல என்னை அரசியல் கோமாளி என்று விமர்சித்தும் சுப்பிரமணிய சுவாமி எதிர்கால பாரதிய ஜனதா கட்சியில் முக்கிய பிரமுகர் என்றும் ஊடக அறிக்கை மூலம் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இன்று இவர்களே சுப்பிரமணியன் சுவாமியை அரசியல் கோமாளி என்று விமர்சிக்கின்றார்கள். நான் எவரையும் இந்நேரத்தில் விமர்சனம் செய்ய விரும்பவில்லை.

ஆனால் யதார்த்தபூர்வமான உண்மைகளை எவர் முன் வைத்தாலும் அவற்றை கண்மூடித்தனமாக எதிர்ப்பதை தமிழ் தேசியம் பேசுபவர்கள் கைவிட வேண்டும்.

இன்று நாட்டில் இருக்கும் தமிழ அரசியல் தலைவர்கள் எதிர் கட்சியில் இருந்தாலும் அரசாங்கத்தில் இருந்தாலும் கூட ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைககான தீர்வை நோக்கியே செயல்பட்டு வருகின்றார்கள்.

அமைச்சர் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாமபரம் மற்றும் நான் உட்பட அரசாங்கத்தில் இருக்கும் தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வில் ஒத்த கருத்தையே கொண்டுள்ளோம். நாம் அரசாங்கத்தின் அபிவிருத்தியை மக்களுக்கு பெற்றுக் கொடுத்த அதே வேளையில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இன்று சுப்பிரமணியன் சுவாமியின் கருத்துகளுக்கு நான் யதார்த்த பூர்வமான பதிலை மூன்று வருடங்களுக்கு முன்பே தெரிவித்திருந்தேன். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும கொழும்பில் தமிழ் தேசியம் பேசுபவர்களும் அதன்படிதான் இன்று அறிக்கைகளை விடுக்கின்றார்கள். இனப்பிரச்சினை தீர்வில்யதார்த்தத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

கிடைப்பதை பெற்றுக் கொள்பவர் பிச்சைக்காரன் அல்ல. மாறாக கிடைப்பதை பெற்றுக் கொண்டு மேலதிகமானதை பெற்றுக்கொள்ளக்கூடிய சாணக்கியம் வடக்கிலும் மேற்கிலும் தமிழ் தேசியம் பேசுபவர்களிடம் வர வேண்டும்.

சுப்பிரமணியன் சுவாமி போன்ற தமிழ் துரோகிகளை உலகெங்கும் வாழும் தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள். நாடகமாடும் சுப்பிரமணியன் சுவாமியின் முகத்தில் கரிபூச வேண்டுமாயின் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்திய பிரதமரை சந் திப்பதில் மட்டும் நிறுத்தி விடாமல் இலங்கை ஜனாதிபதியிடமும் தமது நெருக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறாயின் சுப்பிரமணியன் சுவாமி செல்லாக்காசு சுவாமி ஆகிவிடுவார் என அவர் தெரிவித்தார். (செ-11)

# மிளகாய்...

வீட்டிற்கு துவிச்சக்கர வண்டியில் பயணித்துள்ளார்.

பிரஸ்தாப குடும்பப் பெண்ணை மோட்டார் சைக்கிளில்பின் தொடர்ந்த இரு இளைஞர்கள் அவரது அருகில் வந்து முகத்திற்கு மிளகாய்த்தூளினை விசிறிவிட்டு பெண்ணை துவிச்சக்கர வண்டியிலிருந்து இழுத்து வீழ்த்தியுள்ளனர்.

பின்னர் பணப் பையினை அபகரித்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வேகமாக தப்பிச் சென்றுள்ளனர்.

இதன் போது பணத்தை பறி கொடுத்த குடும்பப் பெண் கூக்குரலிடவே அவ் விடத்திற்கு வந்த பொது மக்கள் பிரஸ்தாப பெண்ணிற்கு முதலுதவி சிகிச்சை வழங்கியதுடன் முள ளியவளை பொலிஸாரிட மும் அழைத்துச்சென்று சம்பவம் குறித்து முறைப்பாடு ஒன்றினை பதிவுசெய்துள்ளனர். (செ-2.5)

# வீதி சமிக்ஞைக் கம்...

என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மல்லாவி மத்திய கல்லூரிக்கும் துணுக்காய்க்கும் இடைப்பட்ட கொத்தம்பியாக் குளம் சந்திவளைவில் உள்ள வீதி சமிக்ஞை கம்பத்தடியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மல்லாவியிலிருந்து தெனனியங்குளத்தில் உள்ள தமது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் மேற்படி இருவரும் பயணித்த வேளை திடீரென வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் அமைககப்பட்டிருந்த வீதி சமிக்ஞை கம்பத்துடன் மோதியதில் இப் பரிதாப சம்பவம் நேர்ந்துள்ளது.

மேற்படி விபத்து தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிககப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மல்லாவி பொலிஸார் சடலத்தை மீட்டு மல்லாவி ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-2.15)


## உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணியிலுள்ள Optimo International பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

Administrator, Assistant Manager
Supervisor Manager

O/L, A/L போதுமானது.
முன்அனுபவம் அவசியமில்லை.
விண்ணப்ப இறுதித் திகதி: 25.08.2014
தொடர்புகளுக்கு: 0770771377
(7469)



நல்லூரான் அருள் பரவட்டும் அகிலமெலாம்

உங்கள் அபிமான புதிய தலைமுறை ஐஸ்கிறீம் நிறுவனமாகிய

SYLO ICE CREAM
(Sweet your Life orbit)

நல்லூர் முன் பருத்தித்துறை வீதியில் இல. 521 C கட்டடத்தில் விழாக்கால விற்பனை நிலையத்தை அமைத்துள்ளது.

நம்பகமான Pasterzed மற்றும் Homeginezed முறைப்படி 100% சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் பல வகை ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழுங்கள்.



521 C, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
இல. 76, அம்மன் வீதி, கொக்குவில்.
021-4926003
(7207)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.